
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய, மாத இதழ்)



மதிமிகுந்த கணபதிக்கு மாங்கனியைத் தந்துவிட்டுப்
பதிசெய்த பெருந்தவத்தால் பழநிக்கு வந்தவனே!
நிதியென்றே உனையென்னும் நிலைபெற்ற நகரத்தார்
இதயமெனும் மாங்கனிக்குள் எழுந்தருள வாராயோ!

ஜனவரி 1989

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 7
ஒலி 12

விபவ
மார்கழி

ஜனவரி
1989

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய் !

—திருஞானசம்பந்தர்

ஆசிரியர் :
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர் :
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.

தொலைபேசி: p. p. 26668

தனி இதழ் ரூ. 2-00 ஆண்டுச் சந்தா ரூ. 24-00

ஐயப்ப குருசாமி முத்து அண்ணாமலை

ஐயப்ப குருசாமியான திரு. வீ. அ. முத்து அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நற்சாந்து பட்டியில் பிறந்தவர்கள். இளை யாத்தக்குடி பெருமருதூருடை யார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். நற்சாந்துபட்டியில் உள்ள முத்து ராம குருசாமி ஐயப்பன் குழுவின், குருசாமிகளில் ஒருவர்.

இவர்கள் சீர்காழி. திருத் துறைப்பூண்டி ஆகிய ஊர்களில வட்டித் தொழில் செய்தவர்கள். நற்சாந்துபட்டி சிவகாமி அம்மன் சிதம்பரேசுவரர் ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தாக்கள் ஐவரில் ஒருவர்.



நற்சாந்துபட்டியில் அமைந் துள்ள பெருமாள் கோயில் இவர் களது தந்தையாரின் அய்யா வீ. மு. வீ. வீரப்ப செட்டியார் அவர்களால் 1905ல் உருவாக்கப் பெற்றதாகும். மலைமேல் உள்ள சுப்பிரமணியர் கோயிலையும் 1892ல் வீரப்ப செட்டியார் அவர் களே ஏற்படுத்தினர்கள். அக் கோயிலில் முத்து அண்ணமலைச் செட்டியார் அவர்கள் 1955 முதல் 1978 வரை தர்மகர்த்தாவாகச் சேவை செய்திருக்கிருர்கள்.

அண்மையில் மதுரை வந்தி ருந்த அவர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டேன். அப்போது அவர்கள் பல சுவையான தகவல் களைத் தெரிவித்தார்கள்.

இவர்கள் 19 ஆண்டுகளாக (33ஆவது முறையாக) சபரிமலை சென்று ஐயப்பனைத் தெரிசித்து வருகிருர்கள். சுமார் 10 ஆண்டு களாக ஐயப்ப குருசாமியாக இருந்து ஐயப்ப சுவாமிகளை வழி நடத்திச் செல்கிருர்கள்.

" தாங்கள் சபரிமலை சென்று வருவதற்கு முக்கியமான கார ணம் ஏதேனும் உண்டா?" என்று அவர்களிடம் கேட்ட போது-

" உண்டு. நான் ஒரு நாள் கனவு கண்டேன். நான் காட்டு வழியாகச் செல்வது போலவும், பெரும் வெள்ளம் வந்து என்னை இழுத்துச் செல்வது போலவும் தலைப்பாகையுடன் வந்த ஒருவர் என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்தது போலவும் அந்தக் கரையின் அருகே தீப ஒளி தெரிந் தது போலவும் கனவு கண்டேன். இதை என் குருசாமியிடம் தெரி வித்தபோது கானகம், தீப ஒளி ஆகியவை கனவில் வந்ததால் அது ஐயப்பன்தான் என்றும் ஐயப்பனை வழிபட்டால் சிவனை வழிபட்டது மாதிரியும் இருக்கும்; விஷ்ணுவை வழிபட்டது மாதிரி யும் இருக்கும். எனவே ஆண்டு தோறும் சபரிமலைக்குச் சென்று வரும்படியும் கூறினர். அதுபோல் நானும் 40 நாட்கள் விரதம் இருந்து கடந்த 19ஆண்டுகளாக ஐயப்பனை வணங்கி வருகிறேன். முதல் ஆண்டில் என்னல் மலை ஏற முடியவில்லை. இப்போது மலையேறிச் சென்று வர முடி கிறது. எல்லாம் ஐயப்பனின் அருள்."

" சாஸ்தா என்பதும் சாத் தப்பன் என்பதும் ஐயப்பன்தான். சீத்தலைச் சாத்தனர் என்கிற பெயரைப் பார்க்கும்போது ஐயப் பன் வழிபாடு அப்போதே இருந் திருக்கிறது என்று நம்பலாம்" என்று கூறினர்கள்,

சென்னை இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த தமிழறிஞர் விபுலானந்த அடிகள் தஞ்சை மாவட்டம் திருக்கொள்ளம் புதூரில் 1947ல் யாழ் நூல் அரங்கேற்ற விழாவிற்கு வந்தபோது, தான் அவருடன் 10 நாட்கள் இருந்ததாகவும் அதனால் தமிழ் மொழியின் மீது தனக்குப் பற்று ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

இவர்கள் 1958 முதல் 1964 வரை நற்சாந்துபட்டி ஊராட்சி மன்றத்தின் தலைவராகச் சேவை செய்தவர்கள்.

நற்சாந்துபட்டி முத்துராம குருசாமி இவர்களது குரு. இவர்கள் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குக் குரு.

இவர்கள் பனையப்பட்டி சுப. அ. நடராசன் செட்டியார் அவர்களின் சம்பந்தி.

இவர்களது புதல்வர் திரு. அ. முத்துராமன் செட்டியார் கோவை சாரதா ஆலையின் பொது மேலாளர் ஆவார்கள். பனையப்பட்டி சுப. அ. சுப. இராமநாதன் செட்டியார் அவர்கள் இவர்களது மாப்பிள்ளை ஆவார்கள்.

நேர்முகம்: எல். சுந்தரம்

காரைக்குடியில் பட்டி மன்றம்

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக கல்வியியல் கல்லூரியில் 16-12-88 அன்று 'மக்கள் கவிஞர்' திரு அரு. நாகப்பன் நடுவராக இருக்க பட்டிமன்றம் நடைபெற்றது கல்லூரி முதல்வர் டாக்டர் ஆ. சோமசுந்தரம் முன்னிலை வகிக்க திரு. ரெத்தினமணி வரவேற்புரை நிகழ்த்தினார்.

'இன்றையச் சமுதாயச் சீர்கேடுகளுக்கு மிகுதியும் காரணம் பத்திரிகைகளா... திரைப்படங்களா?' என்ற தலைப்பில நடைபெற்ற அதில் 'பத்திரிகைகளே' என்ற அணியில் செல்வி நா. முத்தழகம்மை கவிஞர் எஸ். இராமநாதன், ஆ. சந்திரசேகரன் ஆகியோரும் 'திரைப்படமே' என்ற அணியில் சொல்லாத சுந்தர் கோபால், செல்வி சு. சரஸ்வதி செல்வி வீ லலிதா ஆகிய மூவரும் வாதிட்டனர். நடுவர் தமது தீர்ப்பில் திரைப்படங்களே காரணம் என்றும் சமுதாயச் சீர்கேடுகளைச் சாடும் தகுதி பத்திரிகைகளுக்கு உண்டு என்றும் கூறினார். திரு எம் எஸ். இளங்கோ நன்றி கூறினார்.

திருக்குறளில் நமது "குரல்"

ந ன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று
ப கூ ச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர்
அக ர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு
உள்ள த் தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்
உள்ளத் தா ல் உள்ளலும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்
தேவரனைய ரி கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்
அருளிலார்க் கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு
தானம் தவம் இ ர ண்டும் தங்கா வியன்உலகம் வானம் வழங்காது எனின்
புகழ்புரிந்த இ ல் இலோர்க்கு இல்லை இகழ்வார் முன்ஏறுபோல் பீடுநடை
இலன்என்னும் எவ் வ ம் உரையாமை ஈதல் குலன்உடையான் கண்ணேஉள
நத்தம்போல் கேடும் உ ள தாகும் சாக்காடும் வித்தகர்க்கு அல்லால் அரிது
நோய்எல்லாம் நோய்செய்தா ர் மேலவாம் நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்
வேண்டின் உண்டாகத் துறக் க துறந்தபின் ஈண்டுஇயற்பால பல
புகழ்ந்தவை போற்றிச்செயல் வே ண்டும் செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்

ஆக்கியோன்: புலவர் நகைமாமணி. கண. கணேசன் நாட்டரசன்கோட்டை

உழைக்கும் கரங்கள்

கவிஞர் செல்லகணபதி எம். ஏ., கண்டனூர்

நேர்மையெனும் கூர்மையினால் நிமிர்ந்து நின்று
நிலைகுலைந்த எளியவரின் வாழ்வுப் பாதை
சீர்மைபெறத் திட்டமிட்டு உயர வைக்கும்
செயல்புரட்சிப் பிரதமரின் போர்வா ளாகி
கார்வண்ணன் கீதைவழிக் கர்ம யோகம்
கடைப்பிடிக்கும் சிதப்பரத்தின் தொண்டு வாழ்க
ஊர்உயர நல்லபணி செய்வ தற்கே
உழைக்கின்றார் உழைக்கின்றார் உழைக்கின்றாரே.

பாராட்ட வேண்டும்உமை வாரும் என்றால்
பாராட்டா யாருக்கு தேவை யில்லை
நீராரும் கடலுடுத்த நிலத்தில் மக்கள்
நிலைஉயர சமுதாயம் மகிழ்ச்சி காணத்
தாராளமாய் உதவும் செயல்கள் என்றால்
தலைவணங்கி ஏற்றிடுவேன் வருவேன் என்பார்
நேராளன் சிதம்பரத்தின் கொள்கை ஒன்றே
நேர்மையுடன் தலைநிமிரும் அன்புச் சேவை!

புரட்சிவர வேண்டும்இனி பாரதத் தாய்
பொறுத்ததெல்லாம் போதும் எழு உனதுமக்கள்
வறட்சியிலே வாடாமல் இருப்ப தற்கு
வறுமைப்பேய் ஒழிவதற்கு அவர்நெஞ் சத்தில்
புரட்டிஎடு உழைக்கின்ற எண்ணம் தன்னை
புத்துலகம் படைக்கின்ற வீரப் போக்கை
வரட்டுமொழி பேசாமல் செயல் முடித்து
வளங்காண நிறைப்பதையே வேத மாக்கு

சிதம்பரத்தின் சிந்தையெல்லாம் உழைக்கும் மக்கள்
சீர்மைபெற வேண்டும்எனும் உயர்ந்த நோக்கம்
விதவிதமாய் செயல்முடிக்கும் உழைப்பி னால்தான்
விடியலுக்கு பூபாளம் கிடைக்கும் என்பார்
சிதம்பரமே அப்படித்தான் தனது வாழ்வில்
செய்நேர்த்தி கொண்டஒரு தொழிலி னாலே
நிதம்வளர்ந்தார் அன்றி அவர்பாட்டன் பூட்டன்
நிலைக்கவைத்த பொருள் தேடிச் செல்லவில்லை.

இந்தியத்தாய் வளர்வதற்கு வழிஒன் றேதான்
இந்தியர்நாம் எனச்சொல்லும் ஒருமைப் பாடு
வந்தனையால் வால்பிடிக்கும் வழக்கத் தாலே
வாழ்வதற்கு வழிதேடும் புன்மை நீங்கி
எந்தநிலை வந்தாலும் ஏற்றுக் கொள்வோம்
எக்கணமும் உழைப்போம் நாம் தீயசக்தி
முந்திவர ஒட்டாமல் எதிர்த்(து) ஒழிப்போம்
முனைப்போடு தொழில் முடிப்போம் உயர்வோம் ஆணை.

(கோவை பிருந்தாவன் வித்தியாலயா பள்ளிக்கு அடிக்கல் நாட்டியபோது இந்திய உள்துறை இணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களைப் பாராட்டி வழங்கிய வாழ்த்துப் பா இது)

மேலைச்சிவபுரி - பழநி பாத யாத்திரைப் பயண விவரம்

நிகழும் விபவ ஞு தை மீ 4வ (17-1-89) செவ்வாய்க் கிழமை முதல் தை மீ 18 வ (31-1-89) செவ்வாய்க் கிழமை முடிய 15 நாட்கள்.

விபவ ஞு தை மீ 4 வ (17-1-89) செவ்வாய் இரவு 9 மணிக்கு மேலைச்சிவபுரியிலிருந்து சக்தி வேலாயுதசாமி புறப்படுதல்.

தை மீ 5 வ (18-1-89) புதன காலை 6 மணிக்கு கொட்டாம் பட்டியிலிருந்து புறப்படுதல். சமுத்திராபட்டியில் மாலை 4 மணிக்குப் பூஜை. இரவு தங்கல்.

தை மீ 6 வ (19-1-89) வியாழன் சமுத்திராபட்டியிலிருந்து அதிகாலை 2 மணிக்குப் புறப்பட்டு உப்பாறு வந்து சேருதல். மாலை 3 மணிக்கு கொசவபட்டியில் 2-ஆம் நாள் பூஜை இரவு திண்டுக் கல்லில் தங்கல்.

தை மீ 7 வ (20-1-89) வெள்ளி திண்டுக்கல்லிலிருந்து அதி காலை 2 மணிக்கு புறப்பட்டு ரெட்டியார் சந்திரம் வந்து சேருதல். மாலை 3 மணிக்கு செம்மடைப்பட்டியில் 3-ஆம் நாள் பூஜை. இரவு குழந்தைவேலன் கோவிலில் தங்கல்.

தை மீ 8 வ (21-1-89) சனி அதிகாலை 2 மணிக்கு குழந்தை வேலன் சன்னதியிலிருந்து புறப்பட்டு சத்திரப்பட்டி வந்து சேருதல். அடிவாரத்தில் இரவு 4-ஆம் நாள் பூஜை. கடுக்காய்ப் பாறையில் காவடி தங்கி இடும்பன் மலைச் சரிவில் குன்றக்குடிக் காவடியுடன் சேர்ந்து இரவு சுமார் 9 மணிக்கு அன்னதான மடம் அடைதல். மடத்தில் வேல்களுக்கு முதல்நாள் பூஜை

தை மீ 9 வ (22-1-89) ஞாயிறு **தைப்பூசம்**. மடத்தில் வேல் களுக்கு இரண்டாம் நாள் பூஜை.

தை மீ 10வ (23-1-89) திங்கள் மடத்தில் வேல்களுக்கு மூன்றும் நாள் பூஜை.

தை மீ 11வ (24-1-89) செவ்வாய் அன்னதான மடத்தில் நான்காம் நாள் பூஜை. மகம் நாளான இன்று பகல் 2 மணிக்கு மலையில் காவடி செலுத்துதல்.

தை மீ 12வ (25-1-89) புதன் மடத்தில் ஐந்தாம் நாள் பூஜை

தை மீ 13வ (26-1-89) வியாழன் மடத்தில் அடுப்படி பூஜை. தனியார் அபிஷேகங்கள்.

தை மீ 14 வ (27-1-89) வெள்ளி. மலையில் சந்தன அபிஷேகம் மலையில் விடைபெற்று ஊர் திரும்புதல்.

தை மீ 15 வ (28-1-89) சனி. பழனி மலையிலிருந்து புறப் பட்டு இரவு ஒட்டன்சத்திரம் வந்து சேருதல்.

தை மீ 16 வ (29-1-89) ஞாயிறு ஒட்டன்சத்திரத்திலிருந்து அதிகாலை 3 மணிக்குப் புறப்பட்டு திண்டுக்கல் மலைக்கோட்டை ஐயப்பன் கோவில் வந்து சேருதல். அங்கு பூஜை. இரவு சாணார்பட்டி தங்கல்.

தை மீ 17உ (30-1-89) திங்கள். சமுத்திராபட்டி

தை மீ 18உ (31-1-89) செவ்வாய். சமுத்திராபட்டியிலிருந்து அதிகாலை 2 மணிக்குப் புறப்பட்டு வார்ப்பட்டு வந்து சேருதல். மாலை 3 மணிக்கு மேளதாளங்களுடன் புறப்பட்டு மேலைச்சிவபுரி பிள்ளையார் கோவில் வந்து அபிஷேகம் முடிந்து இரவு 9 மணிக்கு இருப்பிடம் அடைதல்.

தகவல் : முருகனடிமை சிங்கப்பூர் மு. ஆ. முத்துராமன்

கன்னியர் திருமணம் விரைவில் அமைய....

(தமிழின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு அமுதத் தமிழ்ப் பாடல்கள் சிலவற்றை மனத் தூய்மையுடன் பொருளை உணர்ந்து ஓதினால் கட்டாயம் கன்னியர் திருமணம் கைகூடும் எனக் குறிப்பிட்டு நவம்'88 இதழில் சில பாடல் வரிகளை வெளியிட்டிருந்தோம். அவற்றைக் கண்ணுற்ற பல வாசகர்கள் அப்பாடல்கள் முழுவதையும் வெளியிட்டால் கன்னியருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என எழுதிய -தைத் தொடர்ந்து இவ்விதழில் சில பாடல்களை வெளியிட்டுள்ளோம். மற்றவற்றை அடுத்தடுத்து வெளியிடுகிறோம்.)

விறல்மாரன் ஐந்து மலர்வாளி சிந்த
மிகவானில் இந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல ஒன்ற
வினைமாதர் தம்தம் வசைகூறக்
குறவாணர் குன்றில் உறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீரக்
குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமான்உ கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவ சிந்த அலைவேலை அஞ்ச
வடிவேல்எ றிந்த அதிதீரா
அறிவால்அ றிந்துன் இருதாள்இ றைஞ்சும்
அடியார்இ டைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்தே
அலைவாய்உ கந்த பெருமாளே!

''திருச்செந்தூர்த் திருப்புகழ்''
(அருணகிரிநாதர் அருளியது)

அதிசய மான வடிவுடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசயம் ஆன(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசயம் ஆகஅன்றோ வாம பாகத்தை வவ்வியதே.

—''அபிராமி அந்தாதி''— 17ஆம் பாடல்

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

''அபிராமி அந்தாதி''— 69 ஆம் பாடல்

பிள்ளையார் நோன்பு

திருப்பூர்

திருப்பூர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் சங்க உறுப்பினர் தேவகோட்டை திரு. எம். தியாக ராஜன் இல்லத்தில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சுமார் 350 ஆண், பெண்கள் இதில் கலந்துகொண்டனர். பொருளாளர் திரு. எல். ஆர்எம். இராம சாமி மற்றும் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்கினர். உறுப்பினர்களுக்கு 1989ஆம் ஆண்டு நாட்காட்டி வழங்கப்பெற்றது.

திருவனந்தபுரம்

திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு நடைபெற்றது. அனைவருக்கும் இரவு விருந்து அளிக்கப்பெற்றது. செயலாளர் திரு. எஸ். கணபதி மற்றும் செயற் குழு உறுப்பினர்கள் விழா சிறப்பாக நடைபெற உதவினர்கள்.

செகந்தராபாத்

ஹைதராபாத் - செகந்தராபாத் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூக பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் செகந்தராபாத்தில் உள்ள ஸ்ரீ ஜெய் மஹாவீர் பவனில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சுமார் 100 பேர் இதில் கலந்து கொண்டனர். சங்கத் தலைவர் திரு. இரா. முத்தையா, துணைத் தலைவர் திரு. ஆர்எம் பிஎல். அருணாசலமும் இழை எடுத்துக் கொடுத்தனர். விருந்துக்குப் பின் 11 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப்பெற்றன. செயலாளர் திரு. அழ. வெங்கிடாசலம் நன்றி கூறினார்.

சிதம்பரம்

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தின் சார்பாக மெய்கண்டார் வித்தியாசாலையில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப்பெற்றது விநாயகருக்கு அபிஷேகம் ஆராதனைகள் நடந்தபின் சுமார் 250 பேர் இழை எடுத்துக் கொண்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. ஆர்எம். சேதுநாராயணன், திரு. பழ அண்ணாமலை செட்டியார், திரு. அ. சுப. அண்ணாமலைச் செட்டியார் திரு. கும. இராம நாதன் செட்டியார் ஆகியோர் இழை எடுத்துக் கொடுத்தனர்.

மதுரை

மதுரை நகரவிடுதியில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது; ஏஎன். மெய்யப்பன் அவர்கள் இழை எடுத்துக் கொள்பவர்களின் பெயர்களை வாசிக்க ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட். முதுநிலை மேலாளர் ஆர்எம். சிதம்பரம் செட்டியார் அவர்களும் ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் அவர்களும் 390 பேருக்கு இழை எடுத்துக் கொடுத்தார்கள். அன்று 9 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப் பெற்றன.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்

வி.என்.சிதம்பரம்



—36—

பிட்ஸ்பர்க்கில் வெங்கடாசல பதி கோயிலை விட்டுப் புறப்பட்ட போது கோனுபட்டைச் சேர்ந்த டாக்டர் வள்ளியப்பன் அவர்களைச் சந்தித்தோம் சிறிது நேரம் நான் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் அங்கு மருத்துவராகப் பணி புரிந்து வருகிருர்கள். தமிழர்களுக்கு மிகவும் உதவியாக இருந்து வருகிருர்கள். அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு காரில் புறப்பட்டு வாஷிங்டன் போய்ச் சேர்ந்தோம்.

அமெரிக்காவில் நியூயார்க்' சிகாகோ முதலியவை பெரிய நகரங்கள். வாஷிங்டன் அவற்றை விடச் சிறிய நகரம்தான். இருந்தாலும் வாஷிங்டன் அமெரிக்காவின் தலைநகரமாகும். மிக அழகான நகரம் அது. அங்கு ஹாலிடே இன் என்ற ஓட்டலில் தங்கினேம். ஹாலிடே இன் ஓட்டல் அமெரிக்க நாட்டின் பெரிய நகரங்கள் அனைத்திலும் அமைந்திருக்கிறது.

ஜனதிபதியின் மாளிகையான வெள்ளை மாளிகையைப் பார்த்தோம். அமெரிக்க நாட்டுத் தலைவர்களின் சிலைகளை லிங்கன் மெமோரியல் என்ற இடத்திலும் சாபர்சன் மெமோரியல் என்ற இடத்திலும் அமைத்திருக்கிருர்கள். நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள், ஜனதிபதிகள் ஆகியவர்களின் சிலைகள் அவற்றில் இடம் பெற்றுள்ளன. பளிங்குச் சிலைகளான அவைகள் தத்ரூபமாகக் காட்சி தருகின்றன. அந்த மண்டபத்திற்கு எதிரே புல்வெளி இருக்கிறது. புல்வெளிக்குப் பக்கத்தில் சாலை அமைந்திருக்கிறது. சாலை

நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் எழுதும்

''எனது ஆலய அனுபவங்கள்''

தொடர் கட்டுரை

எப்ரல்'89 இதழில் தொடங்குகிறது!

யைக் கடந்து கார் நிறுத்துமிடத்திற்குச் செல்வதற்காகக் குறிப்பிட்ட இடத்தில் விளக்கு அமைத்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் கார்களை இடது பக்கம் ஓட்டிச் செல்ல வேண்டும். அமெரிக்காவில் வலது பக்கம் ஓட்டிச் செல்ல வேண்டும். நான் சாலையில் நடந்தபோது அதற்கென்று உள்ள இடத்தில் நடக்காமல் இடது பக்கம் பார்த்து கார் வரவில்லை என்று நினைத்து நடந்தேன். அப்போது அங்கு வலது புறமிருந்து வந்த கார் என் மீது மோதுவதற்கு ஒரு அங்குல இடைவெளிதான் இருந்தது. பின்னால் வந்த என் மகன நான் தவறு செய்யப் போகிறேன் என அறிந்து ''அப்பா'' என்று கத்த, அந்த இடத்திலேயே நான் நின்று விட்டேன். இறைவன் அருளால் உயிர் பிழைததேன். சற்று நேரம் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை மீண்டும் அந்தப் புல் வெளியில் அரை மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு ஓட்டலுக்கு வந்து அன்னை மீனாட்சியை நீண்டநேரம் வணங்கி வழிபாடு செய்தேன். வெளிநாடு செல்பவர்கள் Keep Left, Keep Right என்பதை அறிந்து சாலையைக் கடக்கும் போது அவர்கள் குறிப்பிட்டுள்ள இடத்தில் தான் கடக்க வேண்டும். அதில் கவனமாக இருக்க வேண்டும்.

மறுநாள் நாங்கள் மியூஸியத்திற்குச் சென்றோம். மிகப் பெரிய மியூசியம் அது. இரண்டு நாட்கள் ஆனாலும் அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவ்வளவு அதிசயமானது. அதன் பிறகு கென்னடியை அடக்கம் செய்திருக்கிற இடத்திற்குச் சென்று பார்த்தோம். அங்கு 24 மணி நேரமும் தீபம் எரிந்து கொண்டிருக்கிறது ஆயிரக்கணக்கான மக்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சாரி சாரியாக வந்து வணங்கிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த இடத்தில் கென்னடியின் சரித்திரத்தை சலவைக் கல்லில் சுருக்கமாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

(வளரும்)

திருத்தம்

''நகரத்தார் குரல்'' அக்டோபர் 88 இதழ் 'எனது வெளிநாட்டு அனுபவங்கள்' கட்டுரையில் வாஸ்கோடகாமா அமெரிக்காவைக் கண்டு பிடித்ததாக இருக்கிறது. அது தவறு. உண்மையிலேயே கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்பவர்தான் இந்தியாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நினைத்து மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டு பிடித்தார்.

— ஆசிரியர்

ஸ்ரீவில்லிபுத்தூரில் நகரத்தார் சங்கம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் எஸ் எல். செட்டியப்ப செட்டியார் அவர்கள் இல்லத்தில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நகரத்தார்கள் ஒன்று கூடி நகரத்தார் சங்கத்தைத் தொடங்கிச் சமூக முன்னேற்றத்திற்குப் பல நல்ல தொண்டுகளைச் செய்வது என்று பேசி அதற்காகக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

அதன்படி திரு. சோம. முத்தையா செட்டியார் தலைவராகவும் திரு. லெ. சாத்தப்பன் துணைத் தலைவராகவும் திரு பழ. வெள்ளையன் செயலாளராகவும் திரு. மு. பழநியப்பன் துணைச் செயலாளராகவும் திரு. ரா. அழகப்பன் பொருளாளராகவும் மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர்.

'தொண்டர்' ஆனருள !

'அரிசனங்கள் கோவிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்யலாம்' என்ற சட்டம் வரும் முன்பே, காங்கிரஸ் கட்சி ஆலயப் பிரவேச இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தியது. அப்போது கண்டவராயன்பட்டி நா. அருணாசலன் அவர்கள் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனகர்த்தராக (44ஆவது பட்டம்) இருந்த தவத்திரு தெய்வசிகாமணி ஆறுமுக தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடம் நட்புக் கொண்டு 1947 ஆம் ஆண்டில் காங்கிரஸ்



கட்சியின் முதலமைச்சராக இருந்த தியாக சீலர் உயர்திரு குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் பிரான்மலை, குன்றக்குடி, திருப்புத்தூர், திருக்கோலக்குடி, தேனாட்சியம்மன் கோவில் ஆகிய திருத்தலங்களில் அரிசனச் சகோதரர்களை கோவிலுக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தார். இதனைப் பாராட்டி தமிழ்நாடு அரசு திரு. நா. அருணாசலனுக்கு தங்கப் பதக்கம் வழங்கியது. தான் செய்த சேவை, தன்னலமற்ற சேவையாக இருக்க வேண்டுமெனக் கருதிய அவர் அப்பதக்கத்தைப் பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பகப் பெருமான் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கினார். (அப் பதக்கம் இன்றும் தினசரி கற்பகப் பெருமான் நெற்றிப் பட்டையில் இணைத்துச் சாற்றப் பெறுகிறது.)

நமது நாட்டின் அரசியல் மேதையாகவும் பாரத நாட்டின் முதல் கவர்னர் ஜெனரலாகவும் இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இதனாலேயே திரு. நா. அருணாசலனை 'தொண்டர்' என காரைக்குடியில் முதன் முதலாக அழைத்தார். அதனைத் தொடர்ந்து 'தமிழ்க் கடல்' இராய. சொ. 'தொண்டர்' என அவரை அடிக்கடி அழைத்து வந்தார். இப்போது அனைவரும் அச்சிறப்புப் பெயராலேயே அழைத்து வருகின்றனர்.

திரு. நா. அருணாசலன் காந்திய நெறிகளைக் கடைப்பிடிப்பவர். தேச விடுதலைப் போராட்டத்தில் சேவை செய்தவர். தி. மு க. ஆட்சிக் காலத்தில் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டத்தில் கலந்துகொண்டு 9 வாரம் கடுங்காவல் தண்டனை பெற்று பாளையங்கோட்டைச் சிறையில் இருந்த தியாக சீலர். கண்டவராயன்பட்டி ஊராட்சி மன்றத்தின் இப்போதைய தலைவர். எதற்கும் அஞ்சாதவர். வயதை மீறிய சுறுசுறுப்புடையவர்.

திருமணம்

கொ. அழகாபுரி உ. அ. சா. உ. உடையப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சண்முகத்திற்கும் அலவாக் கோட்டை சி. வெ. நா. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி நாச்சம்மை என்கிற நாகமாலாவிற்கும் 20-11-88 அன்று அலவாக் கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

சுப. கதிரேசன் உதிர்த்த நகைச்சுவை முத்துக்கள்!

ஒரு மாணவன் தன் காதலிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினன்:

''கண்ணே கமலா, நான் எழுதிய இக்கடிதம் உனக்குப் பிடிக்கவில்லையானல் கிழித்துப் போட்டு விடாதே! உன் தங்கையிடம் கொடுத்து விடு.''

ஃ ஃ

ஒருவன் புதிதாக கண்ணுக்குக் கண்ணடி அணிந்து கொண்டு வீட்டுக்குள் சென்று ''இங்கே வா! இந்தக் கண்ணடி எனக்கு நல்லா இருக்கா...?'' என்று கேட்டான்.

அங்கிருந்த பெண்மணி ''வெளியே போய்யா முதல்லே. உன் வீடு அடுத்த வீடு'' என்ருள்.

ஃ ஃ

கண்ணதாசன் தன் திருமணத்திற்கு அடுத்து அடுத்து ஐந்து பெண்களைப் பார்த்தார். அவருடைய தாயார் ''உனக்கு யாரைப் பிடிக்கிறது?'' என்று கேட்டார்.

அதற்குக் கண்ணதாசன் ''எனக்கு ஐந்து பெண்களையும் பிடிக்கிறது'' என்ருர்.

ஃ ஃ

ஒரு ஆள் தபால்காரரிடம் ''எனக்கு ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

அதற்கு தபால்காரர் ''உங்களுக்கு ஒண்ணுமில்லைங்க'' என்ருன்.

ஃ ஃ

ஒரு அதிகாரி, வீட்டுக்கு மண்ணெண்ணெய் வாங்க ரேஷன் கடை முன்பு வரிசையில் நின்ருர். மறுநாள் ஜீனி வாங்க வரிசையில் நின்ருர். வரிசையில் நின்று நின்று அவருக்குக் காலும் கடுத்து விட்டது: மனமும் வெறுத்து வட்டது சரி இனி வாழ்வதில் பயன் இல்லை என்று தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து மலை ஏறிஞர். முன்னே சென்று கொண்டிருந்த அவரை ஒருவன் பிடித்து இழுத்து ''பின்னல் வாய்யா'' என்ருன். என்ன பார்க்கிறீர்கள்? தற்கொலைக்கும் வரிசை தான்!

(திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 18-12-88 அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற பட்டிமன்றத்தில்)

திருநெல்வேலியில் முப்பெரும் விழா

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 18-12-88 ஞாயிறன்று திருநெல்வேலி குறுக்குத்துறை வடக்கு ரத வீதியில் உள்ள கண்டனூர் அ. ப. லெ. அன்னச் சத்திரக் கட்டிடத்தில் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழா நடைபெற்ற அந்தக் கட்டிடம் முழுவதும் திருமணவீடு போல் சிறப்பாக அலங்காரம் செய்யப் பெற்றிருந்தது. திருநெல்வேலி நகரத்தார் சக்கத்தின் இப்போதைய தலைவர் திரு. பிஎல். முருகப்பன் அவர்கள் முதல், சாதாரண உறுப்பினர்கள் வரை எல்லோரும் தங்கள் வீட்டு திருமண விழாபோல் நினைத்து வாயிலிலும், உள் நடைபாதையிலும் நின்றுகொண்டு விழாவிற்கு வந்தவர்களை "வாங்க வாங்க" என்று வாய் அசராமல் வரவேற்றதிலிருந்தே அந்த விழாவின் வெற்றி உறுதி செய்யப் பெற்று விட்டது.

நூல் வெளியீட்டு விழா

முதல் விழா காலை சரியாக 10-30க்குத் தொடங்கியது. செல்வி கே. செல்லப்பிரியா இறைவணக்கம் பாடினார். பொன் புதுப்பட்டியைச் சேர்ந்த 'அறமனச் செம்மல்' நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. கை. திருநாவுக்கரசு செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார். "கலைமகள்' இராம. நடராசன் செட்டியார் அவர்கள் தலைமை உரையாற்றினர்கள். டாக்டர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் தேவகோட்டை அமரர் நா. ராம. வயிரவன் செட்டியார் அவர்களின் திருப்பணி வரலாறு பற்றிய நூல் அறிமுக உரையாற்றினர்கள். பின்னர் அந்த நூலின் முதல் பிரதியை 'இலக்கியச் சிந்தனை' ப. லெட்சுமணன் அவர்கள் வெளியிட ஆர் எம். சண்முகம் செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பாராட்டு விழா


அடுத்து டாக்டர் சுப அண்ணாமலை அவர்கள் 'சைவப் பணியில் நகரத்தார்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர்கள்.


அடுத்து தொழிலதிபரும் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தமிழ்நாடு மருந்து மொத்த வ்யாபாரிகள் சங்கத்தின் மாநிலத் தலைவருமான எஸ்எம். நடராஜன் செட்டியார் அவர்களுக்கு கவிஞர் சே. கனகசபை அவர்கள் பாராட்டு இதழ் படித்துக் கொடுத்தார்கள்.

சங்கத்தின் இப்போதைய தலைவரும் அரிமா சங்கத்தின் 324 பி மாவட்டத்தின் தலைவருமான பிஎல். முருகப்பன் அவர்களுக்கு ஜி. மோகன்தாஸ் அவர்கள் பாராட்டு இதழ் படித்துக் கொடுத்தார்கள்.

எஸ். எம். நடராஜன் செட்டியார் அவர்களையும் பி எல். முருகப்பன் அவர்களையும் பாராட்டி திருவாளர்கள் ஆர். சங்கரய்யா, கே வி ராஜேந்திரன், எஸ் ஜோசப் (முன்னாள் சார்பு நீதிபதி). எஸ். கே. பெருமாள் (துணை ஆணையர் வருமான வரி இலாகா), ஏ. குளத்துராமன் பிள்ளை (கவிமணியின் பேரன்- கணக்காய்வாளர்) டி. வி கல்யாணசுந்தரம், எஸ் இ. எஸ் வி. நாராயணன், பேராசிரியர் கதி. சுந்தரம், தி. இராமநாதன, கவிஞர் சே. கனகசபை ஆகியோர் பேசினர்கள்.

திரு. எஸ் எம். நடராஜன் செட்டியார் திரு. பிஎல். முருகப்பன் இருவரும் ஏற்புரை நல்கிய பின் திரு. சி. கல்யாணகிருஷ்ணன் நன்றி கூறினர்.





முதல் படம் : திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 18-12-88 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் எஸ் எம். நடராஜன் செட்டியார் அவர்களுக்கு கவிஞர் சே. கனகசபை அவர்கள் பாராட்டு இதழ் படித்துக் கொடுக்கும் காட்சி.

இரண்டாவது படம் : மேற்படி பாராட்டு விழாவில் சங்கத் தலைவர் பிஎல். முருகப்பன் அவர்களுக்கு ஜி. மோகன்தாஸ் அவர்கள் பாராட்டு இதழ் படித்துக் கொடுக்கும் காட்சி.

சங்க ஆண்டு விழா

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4-15க்குத் தொடங்கியது. இலக்கியச் சிந்தனை ப. லெட்சுமணன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். திரு. பிஎல். முருகப்பன் வரவேற்க செயலாளர் திரு. ஆர்எம். பழநியப்பன் அறிக்கை வாசித்தார். ப. லெட்சுமணன் அவர்கள் தலைமை உரை ஆற்றினர்கள். கவிஞர் திரு. செல்லகணபதி 'எண்ணங்கள்' என்ற தலைப்பில் கவிதை பாடினர். அடுத்து திருவாளர்கள் பேராசிரியர் கதி. சுந்தரம், இராகவன் முத்து, கவிஞர் சே கனகசபை, டாக்டர் அர. சிங்காரவடிவேலன்'

நகரத்தாரும் தமிழகமும்

ஐந்தாயிரம் ஆண்டுகள் சரித்திரம் கொண்டது நகரத்தார் சமூகம். மூவேந்தர்களுக்குப் பிறகு தமிழை வளர்த்தவர்கள் அறப் பணிகளைச் செய்தவர்கள் நகரத்தார்கள். எல்லாத் துறைகளிலும் முதன்மையானவர்கள் நகரத்தார்கள். ஒன்பது நற்குணங்களை உடையவர்கள் நகரத்தார்கள். முடி சூட்டும் உரிமையை சோழ அரசர்கள் இவர்களுக்கு அளித்திருந்தார்கள். ஒரு இலட்சம் நகரத்தாரை நீக்கிவிட்டுப் பார்த்தால் தமிழகம் முன்னேறியதாக இருக்காது. இங்கு 400 நகரத்தார்கள் உள்ளனர். இங்கு சங்கம் அமைத்த பெருமை எஸ். எம். நடராஜன் செட்டியார் அவர்களுக்கு உரியது. நான் சார்பு நீதிபதியாக இருந்தபோது நகரத்தார் எவரும் என்னிடம் சிபாரிசுக்கு வந்தது இல்லை.

—எஸ். ஜோசப்
(முன்னாள் சார்பு நீதிபதி)

(திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 18-12-88 அன்று திரு. எஸ் எம். நடராஜன் செட்டியார் திரு. பிஎல். முருகப்பனுக்கு நடந்த பாராட்டு விழாவில்)

நகரத்தார்களின் எண்ணிக்கை குறைவு; ஆனால், எண்ணம் பெரிது.

சோழநாட்டில் எங்கு விழுந்தாலும் புண்ணியம் கிடைக்கும். ஏனென்றால் அங்கு விழுகின்ற இடமெல்லாம் கோயில்கள்தான்.

நகரத்தார்கள் செய்துள்ள திருப்பணி வரலாற்றை நம் சங்கங்கள் சென்னையில் பதிவு செய்ய வேண்டும்.

—டாக்டர் சுப. அண்ணாமலை

(திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 18-12-88 அன்று நடைபெற்ற முப்பெரும் விழாவில்)

தாலாட்டுக் கவிஞர் டி. குமரப்பன் சி. கல்யாணசுந்தரம், எம். சிஎன். மாணிக்கம்(மதுரை நகரத்தார் சங்கச் செயலாளர்) ஆகியோர் நம் சமூக முன்னேற்றத்திற்கான கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பின்னர் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கைத்தறி ஆடை அணிவித்துக் கௌரவிக்கப் பெற்றார்கள். அவர்களுக்கு ப. லெட்சுமணன் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்கள்.

பட்டிமன்றம்

இரவு 7-25க்கு பட்டிமன்றம் தொடங்கியது. ''கவிஞர் கண்ணதாசன் மிகுதியும் சிறப்பித்துப் பாடியிருப்பது ஆடவரையே...... மகளிரையே.........'' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் 'ஆடவரையே...' என்ற அணியில் புலவர்மாமணி திரு. மா. முத்துராமன், கவிஞர் திரு. இராகவன்மூத்து, கவிஞர் திரு. சிறுவயல் ஜெயமணி ஆகியோரும் 'மகளிரையே...' என்ற அணியில் பேராசிரியர் திரு. சுப. கதிரேசன், கவிஞர் திரு செ. கல்யாணசுந்தரம், பேராசிரியை திருமதி சி. எஸ். விசாலாட்சி ஆகியோரும் வாதிட்டனர். நடுவர் பொறுப்பேற்ற டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் கவியரசர் மகளிரையே மிகவும் சிறப்பித்துப் பாடியிருப்பதாகத் தீர்ப்பு வழங்கினார்கள்.

திரு. வி. சண்முகம் செட்டியார் நன்றி கூறினார்.

நடராஜன்கள்

பாராட்டுப் பெறுகின்ற சங்கத்தின் முதல் தலைவர் திரு எஸ் எம் நடராசன் அவர்களைப் பாராட்டுவதில் நான் மிக மிக மகிழ்கின்றேன். நான் ஆர் எம். நடராசன். அவர்கள் எஸ் எம். நடராசன். எனக்கு ஊர் புதுப்பட்டி. அவர்கட்கு ஊர் வலையபட்டி. அவர்களும் வயிரவன் கோயில். நானும் வயிரவன் கோயில். இவையெல்லாம் ஒற்றுமைகள். நாங்கள் இருவரும் பொன்னமராவதி வடுகநாதன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். நான் காகித வணிகம் செய்கிறேன். அவர்கள் காகித வாணிகத்தோடு மருந்து வாணிகமும் செய்துவருகிறார்கள். அவர்களைப் பாராட்டுவது என்னையே நான் பாராட்டிக்கொள்வது போல. எனவே. அவர்கள் மணிவிழா, சதாபிஷேகம். நூறாவது ஆண்டுவிழா எல்லாம் கண்டு சீரோடு வாழ வேண்டுமென்று மனம் நிறைய வாழ்த்துகிறேன்.

— கலைமகள்
நடராஜன் செட்டியார்

தனிமையும் பொதுமையும்

தனியாக ஒருவன் பாடினால் அவனை 'நல்ல பாடகன்' என்பார்கள். அதேபோல் தனியாக ஒருவன் அழுதால் 'ஏதோ கவலையில் அழுகிறான்' என்பார்கள். பலரின் நடுவே ஒருவன் பேசினால் அவனைப் 'பேச்சாளன்' என்பார்கள் பலரோடு சேர்ந்து ஒருவன் சிரித்தால் அவனை 'நகைச்சுவையாளன்' என்பார்கள். ஆனால் ஒருவன் தனியாகப் பேசினாலோ தனியாகச் சிரித்தாலோ அவனைப் 'பைத்தியம்' என்பார்கள்.

—புலவர்மாமணி
மா. முத்துராமன்

(திருவரங்கம் திருஇதய மேல்நிலைப் பள்ளியில் 22-11-88 அன்று நடைபெற்ற கருத்தரங்கில்)

ஒரு பையன் ஒரு பெண்ணைப் பார்த்து ''I love you'' என்றான். அவளோ ''I too love you'' என்றாள். அவன் மீண்டும் அவளைப் பார்த்து ''I Three love you'' என்றான்.

சுப. கதிரேசன்



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ பழநி நகரத்தார் சங்கத்தின் நான்காம் ஆண்டு விழா 22-1-89 தைப்பூசத்தன்று பழநி வாசவி மகாலில் மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது. அன்று கருத்தரங்கமும் மறுநாள் 23-1-89 அன்று மாலை 6 மணிக்கு வழக்காடு மன்றமும் நடைபெற உள்ளன.

ஃ காரைக்குடியைச் சேர்ந்த திரு. பழ. கருப்பையா ''பொறுத்தது போதும்'' என்ற பெயரில் தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரித்து வருவதோடு அதில் ஒரு காட்சியில் தோன்றவும் இருக்கிறார்.

ஃ இராங்கியத்தில் புதிதாக உருவாக்கப் பெற்று வரும் அருள்மிகு சுப்பிரமணியர் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா தை மீ 28உ (10-2-89) நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஃ தேவகோட்டை நகரச் சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாவும் தை மீ 28உ (10-2-89) நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஃ உ. சிறுவயல் தேனாற்றங்கரை அருள்மிகு ஆஞ்சனேயர் கோயிலின் மூன்றும் ஆண்டு ஆஞ்சனேயர் ஜெயந்தி 7-1-89 சனிக்கிழமை நிகழவிருக்கிறது.

ஃ பழநி பாதயாத்திரைக் குழு சார்பாக சிவகங்கைச் சிவன் கோயிலில் 10-1-89 அன்று நடைபெற உள்ள இலக்கிய நிகழ்ச்சியில் 'பொற்கிழிக் கவிஞர்' பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு பேச இருக்கிறார்கள்.

ஃ மதுரையில் நகரத்தார் பக்தி நெறி மன்றம் என்ற அமைப்பு 30-12-88 அன்று தொடங்கப் பெற்றுள்ளது. இதன் சார்பாக ஒவ்வொரு ஆங்கில மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உள்ள தண்டாயுதபாணி சுவாமிக்கு காலை 11 மணிக்கு அபிஷேகம் நடைபெற உள்ளது.

ஃ தேவகோட்டை அருகே உள்ள வளங்காவயலில் 29-11-88 அன்று 'சமூக நலம் காப்பதில் பெரும் பங்கு ஆண்களுக்கா..... பெண்களுக்கா' என்கிற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. நடுவர் பொறுப்பேற்ற கவிஞர் திரு. சேது அருணாசலம் 'ஆண்களுக்கே' எனத் தீர்ப்பு வழங்கினார்.

ஃ ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பாக ஈரோட்டில் 25-12-88 அன்று சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் ''நகரத்தார்களும் நகைச்சுவையும்'' என்ற தலைப்பில் கவிஞர் திரு. சிவல்புரி சிங்காரம் சிறப்புரையாற்றினார்.

ஃ செல்வி நா. முத்தழகம்மையின் தந்தை திரு. மு. நா. நாராயணன் செட்டியார் இராயவரம் காகித ஆலையில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்

சோ. முருகப்பா

(திரு. சொ. முருகப்பா பற்றி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சகோதரி நீலாவதி இராமசுப்பிரமணியம் அம்மையார் எழுதிய கட்டுரை இது)

''ஒரே பூக் குவியலிலிருந்து பலவிதமான மாலைகளையும் தொடுத்து விடமுடியும். அதைப் போலவே அநித்தியமான மனிதன் தன்னுடைய ஒரே பிறவியிலேயே எத்தனையோ விதமான நற் காரியங்களை எல்லாம் சாதித்துவிட முடியும்'' என்ற புத்தர் பிரானின் திருவாக்கை மெய்ப்பிக்கும் மேதாவிகளிலே சொ. முருகப்பாவும் ஒருவர்.

சமூகத் துறையில் தனவணிக நாட்டில் செய்ய வேண்டிய திருத்தங்கள் நிறைய இருந்தன. கல்யாணத்தில் பெண்ணுக்கு விலை கொடுக்கும் (வாங்கிச் செய்தல்) பழக்கம் சர்வசாதாரணம். பெண் கல்வி என்பது பேசப்படாதஒன்று. பெண்ணை வியாபாரப் பொருளாக்கி விலைபேசும் பழி கண்டு உள்ளம் கொதித்து எத்தனையோ பேசி, எழுதிப் பெண்ணின் பெருமையை உணர்த்தினர் முருகப்பா.

தம் கொள்கையை ஒத்துக் கொள்கிறார்களோ இல்லையோ, அதை எடுத்துப் பேசத் தயங்குவதில்லை. அவர் எங்கும் யாரிடமும் அஞ்சாமல் வாதிடுவார். கொள்கைப் பிடிப்போடு பேசும்போது மென்மையைவிட வன்மையே மிகுந்திருக்கும். ஆனால் வன்மையோடு நகைச்சுவையும் கலந்திருக்குமாதலால். கேட்பவர்கள் சினங்கொள்ள வழி இருப்பதில்லை.

செந்தமிழ்ப் புலவர் திருவயிநாகரம் அ. இராமநாதன் செட்டியாரிடம் ஒருமுறை பெண் விலை பற்றி முருகப்பா அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் திரு இராமநாதன் செட்டியார் பழமைப்பற்று மிக்கவர், நல்ல புலவர், முருகப்பாவின் புதுமைக் கருத்தும், பேச்சுத் திறனும் அவர் மனதை ஈர்த்து விட்டது. அதை ஒரு பாட்டாகவே பாடி விட்டார்.

''மின் அனைய மடவார்க்கு
விலை என்ன? வீண் செலவு

விநோதமான பெயர்கள்!

காரியாபட்டிப் பகுதியில் உள்ள சில ஊர்களின் விநோதமான பெயர்கள்:-

ஆவியூர், அல்லாலப்பேரி, கிழவனேரி, குரண்டி, மந்திரிஓடை, மனைவியேந்தல், ஆண்மைபெருக்கி, பாம்பாட்டி, மானங்காத்தான், முஸ்டக்குறிச்சி, வரலொட்டி, வலுக்கலொட்டி.

காரியாபட்டிப் பகுதியில் உள்ள சிலமனிதர்களின் விநோதமான பெயர்கள்:-

குருவி, வேடன், பொட்டையம்மாள், பச்சையன், வில்லி, வேடச்சி, ஒச்சம்மாள், ஆண்டிச்சி, பொடிசி, மூக்காண்டி, பூச்சி, எர்ரக்கால்.

தகவல்: ஏ.ஆர். மணி, ஆத்தங்குடி

வேண்டுந் தானே?
பன்னரிய கல்விக்குப்
பணம் எங்கே? ஏழையென்று
பாரிற் சூழ்ந்த
இன்னலுக்கு விடை காண
வேண்டாவோ? இரக்கமெலாம்
குடி போயிற்றே?
உன்னுக்? ''என்று உரைத்த
மொழி
முருகப்ப! கேட்டுமனம்
உருகினேனே!''

''நினைத்துப் பாருங்கள் ஐயா! இந்நேர்மையற்ற செய்கையை!'' என்று முருகப்பா எடுத்துக் காட்டியது அவர் நெஞ்சை என்ன செய்தது என்பதை பாட்டு, காட்டுகிறதல்லவா?

பத்திரிகை உலகில் முருகப்பா அவர்கள் செய்த தொண்டுகள் பல. பிரசாரம் வலுக்க, கொள்கை பரவ, பத்திரிகைகளே சிறந்த சாதனம் என்பதில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை. ''தனவைசிய ஊழியன்'' ''குமரன்'' முதலிய இதழ்களை அவர் திறம்பட நடத்தியவர். மக்களிடையே அறிவுச் செல்வம் நிரம்பி வழிய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டவர் சீர்திருத்தத் தொண்டோடு இலக்கியத்தொண்டிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். முருகப்பா, தமிழ் இலக்கியங்களில் சிறந்த புலமை உடையவர். அவர் பேச்சிலே ஏக்கமிருக்கும். அதை அவர் ஆர்வம், மிகுந்து வெற்றி கண்டு விடும்.

வேலூரில் பிள்ளையார் நோன்பு

வட ஆற்காடு மாவட்ட நகரத்தார் சங்கத்தின் சார்பாக வேலூரில் அச்சங்கத்தின் தலைவர் பிஆர். மெய்யப்பச் செட்டியார் அவர்கள் இல்லத்தில் 14-12-88 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சுமார் 81 பேர் அதில் கலந்து கொண்டு இழை எடுத்துக் கொண்டனர். சங்கத் தலைவர் திரு பிஆர் மெய்யப்பச் செட்டியார் துணைத் தலைவர் திரு. விஎல். சுப்பையா செட்டியார், துணைச் செயலாளர் திரு. ஏஆர். திருநாவுக்கரசு ஆகியோர் பிள்ளையார் நோன்பிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

"செல்விகளின் சேர்ந்திசை"

ஆர்.எம். சிட்டுக்கலாதேவி பொன். புதுப்பட்டி

கட்டித்தங்கம் என்றவனைக் காணவில்லைங்க
கண்டசரம், ரொக்கம் காப்புத்தர முடியலீங்க
பட்டிதொட்டி எங்கிலுமே இந்தத் தொல்லைங்க
பட்டதாரி மாப்பிள்ளைக்கும் புத்தி இல்லைங்க!

தட்டித்தட்டிப் பார்த்துவிட்டேன் கதவு திறக்கல
தாலிகட்ட ஒருவன்கூட 'ரேட்'டைக் குறைக்கலே

சில்வர்அடுக்குகளை விலைகொடுத்து வாங்கமுடியல
சத்தியமா பெண்கள் வாழ்வு இன்னும் விடியல!
பஞ்சத்தினல் பசியோடு தூங்க முடியல—தவறிப்
படுத்திட்டாலும் கொசுக்கடியைத் தாங்க முடியல
நெஞ்சத்தினல் நிம்மதியை வாங்க முடியல—நாட்டை
நேருமாமன் பேரனும் மாத்த முடியல!

செட்டிநாடும் வங்கித் தொழிலும்

பெரியோர்களே! நண்பர்களே!

சிறிய எண்ணிக்கையே கொண்ட நம் நகரத்தார் சமூகம், நம்முடைய தொழில், வணிகச் சிறப்பாலும். கல்விப் பணியாலும், தெய்வத் திருப்பணிகளாலும், நாடு முழுவதும், ஏன் உலகம் முழுவதும் மதிக்கப்படுகிறது. 'மன்னர் பின்னோர்' என்ற சிறப்பு அடைமொழி நமக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகச் சிறிய ஒரு சமூகம், இவ்வளவு பெயரும் புகழும் பெற்றிருப்பது, உலக சரித்திரத்திலேயே வேறு எங்கும் காண இயலாது.

மேற்கூறிய நமது பணிகள் அறிமுகமாகி உள்ள அளவிற்கு, நம் நகரத்தரார்கள் வங்கித் துறை வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டுகள், இதுவரை சரிவரத் தெரியவில்லை. தமிழ் நாட்டில் வங்கித் துறையை வளர்த்த பெருமை நமக்குத்தான் உண்டு. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், சென்னையைத் தலைமையாகக் கொண்ட இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய இரண்டு வங்கிகளையும் நம்மவர்கள்தான் தொடங்கி வைத்தார்கள். அவைகள் இன்று ஆல்போல் தழைத்து பெருகி வளர்ந்து நிற்கின்றன. இன்று அவைகள் நாட்டுடமை ஆக்கப்பட்டுவிட்டாலும், அவைகளைத் தோற்றுவித்த பெருமை நகரத்தார்களுக்கே உரியது.

அதேபோல பிற்காலத்தில் மதுரையில் கருமுத்து குடும்பத்தினர் துவக்கிய பாங்க் ஆப் மதுரை இன்று தனியார் துறையில் தலை சிறந்த வங்கிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த மூன்று வங்கிகளிலும் படித்துப் பட்டம் பெற்ற நகரத்தார் இளைஞர்கள் ஏராளமான பேர் வேலை பார்க்கிருர்கள்.

பர்மா, செய்கோன் போன்ற வெளிநாடுகளில் நம் தொழில்கள் முடங்கிவிட்ட 1940-50க்கு இடைப்பட்ட நாட்களில்இந்தியன் வங்கியும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் நம் இளைஞர்களுக்கு மேலை வாய்ப்புகள் அளித்து உதவியதை நாம் என்றும் மறந்துவிடாமல் நன்றியுடன் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல சமீப காலங்களில் மதுரை வங்கி, நம் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் நிறைய வேலை வாய்ப்பு அளித்ததை யாரும் மறக்க இயலாது. மதுரை வங்கியில் கிடைத்த வேலையினுல் தான். பல பையன்களுக்கு நல்ல இடத்து சம்பந்தங்கள் கிடைத்தன என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் இதுவரை, இந்த வங்கிகள் தோன்றிய வரலாற்றையும், நம்மவர்கள் அதன் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகளையும், அதில் பணியாற்றி ஓய்வுபெற்ற பெரியவர்கள் பற்றிய விவரங்களையும் தொகுத்து வெளியிடுவதற்கு, எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே 37 ஆண்டுக் காலம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவன் என்ற முறையில் அடியேன் இந்தப் பணியைத் தொடங்கலாம் என எண்ணியுள்ளேன். இந்தப்பணியில் மேற்கண்ட மூன்று வங்கிகளுடன், தொடர்புள்ள பெரியோர்களும், பணிசெய்து ஓய்வு பெற்ற நண்பர்களும், தங்களிடமுள்ள தகவல்களையும் விவரங்களையும் கீழ்க்காணும் எனதுமுகவரிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறேன்:

எஸ். அண்ணுமலை. 15 சீனிவாசபுரம், கரூர்-639001 திருச்சி மாவட்டம்.



தேவகோட்டை நா. ராம. வயிரவன் செட்டியார் அவர்களின் திருப்பணி வரலாறு பற்றிய இதழை திருநெல்வேலியில் 'இலக்கியச் சிந்தனை' ப லெட்சுமணன் அவர்கள் வெளியிட ஆர்எம். சண்முகம் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

திருநெல்வேலியில் சிந்திய முத்துக்கள் !

டாக்டர் அர சிங்காரவடிவேலன் அவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போலப் பெருமிதமும் பேராற்றலும் வாய்ந்தவர்கள். காவடி ஏந்தும் நகரத்தார் பழநிக்குப் பாதயாத்திரை மேற்கொள்ளும்போது துணையாக வருபவை இரண்டு. ஒன்று, பழநியாண்டவனின் பாதப் பொன்மலர்; இன்னொன்று சிங்கார வடிவேலனின் செந்தமிழ்ப் பாட்டு.

— கலைமகள் நடராஜன் செட்டியார்

இலக்கியச் சிந்தனை மூலம் இலக்கிய வரலாற்றில் வளர்ச்சியை ஏற்படுத்தும் சிறப்புக்குரியவர் ப. லெட்சுமணன் அவர்கள். கற்பகாம்பாள் ஆலையின் நிர்வாக இயக்குநர். எளிமையும் திறமையும் நிறைந்தவர். கண்டனூர் லெ. சித. பழநியப்ப செட்டியாருக்கு இரண்டு கண்கள். ஒரு கண் ப. லெ; இன்னொருகண் ப. சித. ஆகிய அமைச்சர்.

— கலைமகள் நடராஜன் செட்டியார்

சமுதாயத்தின் அழகை, சிறப்பை, மரபைப் பாடுபவன் கவிஞன்; கவியரசர் கண்ணதாசன் இளமையாக இருந்த போது பெண்களைப் பாடினார். வயது ஆக ஆகத் தத்துவங்களைப் பாடினார். அவர் பெண்களை இழிவாக நினைக்கவில்லை; தாய்மைக்கு உயர்வு கொடுத்தார்.

— டாக்டர் சுப, அண்ணாமலை

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகம் ஆகியவை தனி நபரால் தொடங்கப் பெற்றவை. இந்தப் பெருமை மற்ற சமூகத்திற்கு இல்லை.

— ஏ. குளத்துராமன் பிள்ளை
(கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பேரன்)

உங்கள் குரல்

தங்களது டிசம்'88 இதழ் சிறப்புற அமைந்திருந்தது. காரைக்குடி நகரத்தார் நற்பணி மன்றத்து இளைஞர்களின் சேவை பாராட்டுக்குரியது. தங்கள் இதழ், புத்தாண்டில் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்கள்

மேலச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

பிள்ளையார்நோன்பு நேரத்தில் அதைப் பற்றியதொரு நேர்முகம் ஒன்றை வெளியிட்டு அசத்தி விட்டீர்கள். செல்வி கவிதாராணி அவர்களின் கேள்விகளுக்கு முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் விதத்தில் தெளிவாகவும் விளக்கமாகவும் பதில் தந்திருந்தார்கள்.

பொன் மனச் செம்மல் கட்டுரையை ஆசிரியர் வி என். சிடி. அவர்கள் வேகமாக முடித்து விட்டார்கள்.

கனகு சுப்பு
கல்யாண்குமார்
கிருஷ்ணகிரி

டிசம்'88 இதழில் 'நகரத்தார் பற்றி வெ. சாமிநாத சர்மா' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் பர்மாவில் நகரத்தார்கள் கதர் இயக்கத்திற்குக் காட்டிய பேராதரவு பற்றி ஒரு குறிப்பு இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அண்ணல் காந்தியடிகளின் கதர் இயக்கத்திற்குச் செட்டி நாட்டுப் பெருமக்கள் பெரிதும் உறுதுணையாக இருந்தனர் என்பது நமது இந்திய விடுதலை இயக்க வரலாறு தரும் செய்தியும் ஆகும்.

அ. வல்லநாட்டான்
கண்டவராயன்பட்டி

டிசம்பர்'88 இதழ் அட்டையில் புலிமேல் உள்ள ஸ்ரீ ஐயப்பனின் திருஉருவம் அருமை. முனைவர் சுப. அண்ணாமலை-செல்வி அண. கவிதாராணியின் சந்திப்பு மூலம் பிள்ளையார் நோன்பு பற்றிய பலஅரிய செய்திகளைத் தெரிந்து கொண்டோம். இது போல் நகரத்தார்கள் மட்டும் கடைப்பிடிக்கும் இதர செயல்பாடுகளை குரலில் வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

வை. அழகப்பன் B. Sc.
லாலாப்பேட்டை

'வழிகாட்டி மறைந்தது' என்று, புதுடில்லி எம். எஸ் பி. சண்முகம் அவர்களைப் பற்றி திரு. எல். சுந்தரம் எழுதியிருந்த கட்டுரை அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தது இனி வாழ்கின்றவர்கள் அவராக வாழ வேண்டும்; அல்லது அவர் நினைவாக வாழ வேண்டும் என்ற தெளிவு, அக் கட்டுரையைப் படிக்கும்போது ஏற்படுகிறது. திரு. சண்முகத்தின் உடல்தான் மயானம் சென்றுள்ளதே தவிர அவரது உயிர் நகரத்தார் மனங்களை விட்டுச் செல்லவில்லை.

வி. பழநிக்குமார்
கண்டவராயன்பட்டி

'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற தலைப்பில் டிசம்'88 இதழில் வெளிவந்த மகாபாரதம் பற்றிய சிறுகட்டுரை சிந்தனைக் குரியது; சிறப்பானது. ஏற்றத் தாழ்வு பாராது, செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்துச் செய்து வர வேண்டும் என்ற நல்ல கருத்தை எடுத்துக் கூறுகிறது. அதை எழுதிய திரு சொக்கலிங்கத்திற்கும் வெளியிட்ட குரலுக்கும் பாராட்டுகள்.

இராம. இராமநாதன்
கண்டனூர்

''நகரத்தார் குர''லின் செய்திகள், கட்டுரைகள் மட்டுமல்ல. அதன் அச்சு, அமைப்புக் கூட சிறப்பாக இருக்கிறது. (உதாரணம் முனைவர் சுப. அண்ணாமலை- செல்வி அண. கவிதாராணி ஒரு நேர்முகம் கட்டுரை)

எஸ். இராமநாதன்
திருச்சி

91/1

OUR PONGAL GREETINGS

With Best Compliments From

K. SENTHAMARAI

S. S. R. AGENCIES

57, Govindappa Naicken Street

MADRAS-600 001

☎ 513411

திருநெல்வேலியில் சிந்திய முத்துக்கள்!

மத்திய உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் மற்றும் நான் பிறந்த ஊரில், தான்பிறந்ததற்குப் பெருமைப்படுவதாக டாக்டர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் கூறினுர்கள். அது தவறு. சிங்கார வடிவேலன் அவர்கள் பிறந்த ஊரில் நாங்கள் பிறந்ததற்காகப் பெருமைப் படுகிரேம்.

— 'இலக்கியச் சிந்தனை' ப. லெட்சுமணன்

தமிழ் பிறந்த பொதிகைமலை திருநெல்வேலிச் சீமை. 'பொதிகை மலை தோன்றி மதுரை நகர் வந்த தமிழ் மன்றமே' எனக் கவியரசர் கண்ணதாசன் பாடியிருக்கிருர். தமிழையும் தாமிரபரணியையும் சேர்த்துப் பாடிய பாரதி, நகரத்தார்கள் தங்கள் இனத்திற்காக மட்டு மல்லாது நாட்டுக்காகவும் உழைத்திருக்கிருர்கள் எனப் பாடியிருக் கிருன்.

— டாக்டர் சுப. அண்ணுமலை

பார்ஸி இனத்து எண்ணிக்கையும் நகரத்தார் இனத்து எண்ணிக் கையும் முன்பு சரிசமமாக இருந்தது இப்போது நிறைய வித்தியாசம். செட்டிநாடு முழுவதும் நமக்குள்ள சொத்து மதிப்பும் ஒரு குறிப்பிட்ட பார்ஸி குடும்பச் சொத்து மதிப்பும் ஒன்ருக உள்ளது. பார்ஸி இனத்த வர் நம்மைப்போல் சுவீகாரம் செய்து கொள்வதில்லை. பிள்ளை இல்லாதவர்கள் சொத்துக்களைத் தர்மத்துக்கு எழுதி வைத்து விடுகிருர்கள்.

—ப. லெட்சுமணன்

செட்டிநாட்டில் ஓராண்டில் சுமார் 200 திருமணங்கள் நடைபெறு கின்றன. அவற்றில் 25 திருமணங்கள் பெரிய அளவில் நடைபெறு கின்றன. அந்த 25 திருமணங்களைச் சேர்ந்த 50 வீட்டார் நம்மில் 50 திருமணங்களுக்குப் பணம் கொடுத்து உதவினுலே போதும்.


— ப. லெட்சுமணன்

நாம் சங்கங்களை வைத்து இப்போது செயல்படுகிரேம். இதனைச் 'சங்க காலம்' என்று கூறலாம். அந்தக் காலத்தில் நம்மிடையே சிக்கனம் இருந்தது. ஆனுல் இப்போது நம் தேவைகள் அதிகமாகி விட்டன.

பழநிக்குப் பாத யாத்திரை செல்கிறவர்களுக்கு இனி ஆண் குழந்தைகளே பிறக்கும். அப்படி ஆண் குழந்தைகளாகப் பிறந்தால் பெண்களுக்குக் கிராக்கி வந்து பெண்களுக்குப் பணமும் நகைகளும் வரங்கிச் செய்கிற காலம் நிச்சயம் வரும்.

பண வசதி படைத்தவர்கள் தம் உறவினர்களை ஆதரித்தாலே போதும்; நம்மில் வசதிக் குறைவானவர்கள் இருக்கவே மாட்டார்கள். பண வசதியுடையவர்கள் தங்களது மணி விழாவின்போது ஒரு நகரத்தார் பெண்மணிக்குத் திருமணம் செய்து வைத்தால் அது புண்ணியம்.

— எம். சி என். மாணிக்கம்



நேமத்தான்பட்டி மெ. மு வெ கா. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்களுக்கும் அவர்களது துணைவியாருக்கும் 11-11-88 அன்று வயிரவன்பட்டி வயிரவன் கோயிலில் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

கும்பகோணம் நகரத்தார் அறக் கட்டளை

கும்பகோணம் நகரத்தார் அறக் கட்டளைக்குப் புதிய நிர்வாகக் குழுவினர் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர்.

திரு. கே.ஆர். பழநியப்பன் தலைவராகவும் திரு எம். பழநியப்பன் செயலாளராகவும் திரு. பிஎல். விசுவநாதன் பொருளாளராகவும் மற்றும் நால்வர் செயற் குழு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர்.

23-11-88 அன்று நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில், திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் பிள்ளையார் பட்டியில் நடைபெற்று வரும் கூட்டுத் திருமணங்களுக்கு திருமணம் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் நன்கொடை கொடுத்து வருவதெனத் தீர்மானிக்கப் பெற்றது.

எழுத்தாளனின் திறமை

நமது கண்கள் காணும் அருமை மக்களைவிட, நாம் கருத்திலேயே காணும் மக்களை மதிக்கிறோம்; போற்றுகிறோம். நாவல் கதைகளில் வரும் பெயர்களை, குழந்தைகளுக்கு வைத்து மகிழ்கிறோம்.

இல்லாத நபர்கள் என அறிந்தும், நாவலில், அவர்களுக்கு ஏற்படுகிற துன்பம் கண்டு கண்ணீர் சிந்துகிறோம்.

நமக்கு ஊன்றுகோலாகச் சில பாத்திரங்களையும், சில கவிதை வரிகளையும், எண்ணி இன்புறும்படி செய்வதுதான் எழுத்தாளனின் திறமை.

—மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்



காரைக்குடி வ. ராம. ராம. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி விசாலாட்சி B. Com க்கும் கோட்டையூர் பெ. மு. அ. ராம. மூ. ராம. முத்தையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அழகப்பன் என்ற முத்தையாவுக்கும் காரைக்குடி மணமகள் இல்லத்தில் 20-11-88 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பிள்ளையார் நோன்பு பற்றிய கட்டுரையில் திருத்தம்

நமது ''நகரத்தார் குரல்'' டிசம்பர் 88 இதழில் 'முனைவர் சுப. அண்ணாமலை - செல்வி அண. கவிதாராணி ஒரு நேர் முகம்' என்ற தலைப்பில் பிள்ளையார் நோன்பு பற்றி வெளியான கட்டுரையில் சில வாசகங்கள் தவறாக உள்ளன என்றும். அவற்றிற்குத் திருத்தம் வெளியிடுமாறும் கூறி முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் திருத்தம் செய்து தந்து உதவினார்கள். அதனை இவ்விதழில் வெளியிடுகிறோம்.

6 ஆம் பக்கம் வெளியாகியுள்ள ''இந்நோன்பு எப்போது கொண்டாடப் பெறுகிறது?'' என்ற வினாவுக்குச் சரியான பதில்—

''முருகப் பெருமானுக்கு உரிய திதியாக சஷ்டி விளங்குதல் போன்று பிள்ளையாருக்கு உகந்த நட்சத்திரமாக இருப்பது சதய நட்சத்திரம். இந்த இரண்டும் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து இருபத்தியோராவது நாளில் ஒன்றாகக் கூடுகின்றன. இவ்விரண்டும் ஒன்றாகக் கூடுவது ஆண்டின் இந்த ஒரேயொரு நாளில்தான். இந்நாளிலேயே இப்பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெறுகிறது'' என்று இருக்க வேண்டும்.

7 ஆம் பக்கம் வெளியாகியுள்ள ''கோடித்துணியில் ...'' என்று தொடங்கும் வினாவுக்கான பதிலில் ''இருபத்தியோராவது நாளில் சதய நட்சத்திரமும் சஷ்டி திதியும் ஒன்றாகக் கூடுகின்ற அந்நாளில் இந்நோன்பு மேற்கொள்ளப் பெறுவதால் ஏற்பட்டது'' என்று இருக்க வேண்டும்.

அமெரிக்கா செல்ல ஒரு வாய்ப்பு

நம் இனத்து இளைஞர்கள் பலரும் பல துறைகளிலும் ஈடுபட்டுத் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ளப் பாடுபடுகிறார்கள். ஆனால் அதற்குத் தகுந்த பலன் கிடைக்கிறதா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இருபது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா சென்ற நம் நாட்டவர் பலர் தொழில், வர்த்தக அதிபர்களாக, பெரும் கோடீஸ்வரர்களாக உயர்ந்து அந்நாட்டில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள்.

அமெரிக்காவில் வேலைவாய்ப்புகள் பல உள்ளன. கூலி வேலை முதற்கொண்டு பல வேலைகளை பள்ளி இறுதி வகுப்புப் படித்தவரும் செய்து, பொருள் ஈட்டும் நிலை அங்கு உண்டு. சிறு கடைகள் வைத்து வாழ்க்கை நடத்தி வரும் இந்தியர்கள், அமெரிக்க நிறுவனங்களில் வேலை பார்க்கும் சாதாரண பி. ஏ. பி. காம். படித்த இந்தியர்கள் எனப் பலருக்கும் அமெரிக்கா வாழ்வு கொடுத்து வருகிறது.

அமெரிக்காவில் நிறவெறி குறைவு தகுதிக்கும், திறமைக்கும் மதிப்புக் கொடுக்கிறார்கள். ஆங்கில மொழி பேசும் அமெரிக்கர்கள் பழகுவதற்கு இனியவர்கள். இந்தக் காரணங்களாலேயே நம் இளைஞர்களை அமெரிக்கா செல்லும்படி அழைக்கின்றேன். அமெரிக்காவில் உள்ள படிப்பு, வேலை வாய்ப்புகளை immigration Visa முறைகளை நம் இளைஞர்களுக்கு தெரியப்படுத்த அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க ஒரு அமைப்பு. மிகவும் அவசியமாகிறது. இத்தகைய அமைப்பை சென்னையில் துவங்கி நடத்த நான் விரும்புகிறேன். இந்த அமைப்பு ஒரு கூட்டு முயற்சியாக அமைந்தால் இன்னும் நல்ல பலன் கிடைக்கும். அமெரிக்கா பற்றி ஓரளவு தெரிந்த நம் நண்பர்கள் இந்த அமைப்பை ஏற்படுத்தி வழிகாட்டவிரும்புகிறார்கள். வாரம் 3, 4 மணி நேரம் இதற்காக செலவிடக் கூடியவர்கள் ஒன்று கூடி இந்த யோசனையை செயலாக்க முன்வரும்படி அழைப்பு விடுக்கிறேன். விரும்புவோர் எனக்கு எழுத வேண்டுகிறேன்.

என் முகவரி ;

டாக்டர் இராம. குமரப்பன்

907, 37 ஆவது தெரு

கொரட்டூர், சென்னை-600080.

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாவில் புலவர் அவை

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாவில் 15-11-88 சஷ்டியன்று காலை 9-30 மணியளவில் 'கம்ப ராமாயண கதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும் பாத்திரம் கைகேயியா? சூர்ப்பனகையா? வீடணனா?'' எனும் தலைப்பில் புலவர் அவை டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களை நடுவராகக் கொண்டு நடைபெற்றது. செயலாளர் திரு. சித. அருணாசலம் வரவேற்றார். 'கைகேயியே' எனும் அணியில் புலவர்மாமணி திரு மா. முத்துராமன், திருமதி சி. எஸ். விசாலாட்சி, திரு. நா. செல்லக்கிருஷ்ணன் ஆகியோரும் 'சூர்ப்பனகையே' எனும் அணியில் டாக்டர் கரு. முத்தையா திருமதி புனிதா ஏகாம்பரம், கவிஞர் திரு சேது அருணாசலம் ஆகியோரும் 'வீடணனே' எனும் அணியில் டாக்டர் பழ முத்தப்பன் திருமதி சரோஜினி, திரு. வ. தேனப்பன் ஆகியோரும் வாதிட்டார்கள். நிறைவாக 'சூர்ப்பனகையே' என்று நடுவர் தீர்ப்பு வழங்கினார்.

மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்றம்

சிவனுக்கென்று சிவத் தலங்கள் உள்ளன; விஷ்ணுவுக்கென்று விஷ்ணுத் தலங்கள் உள்ளன. ''இதைப்போல தமிழுக்கென்று செட்டி நாட்டிலே தமிழ்த்தலங்கள் உள்ளன'' என்றார் டாக்டர் உ. வே சுவாமிநாத அய்யர். அப்படிப்பட்ட தமிழ்த் தலங்களில் தலைசிறந்த தலம் மேலைச்சிவபுரியாகும்.

''புலவர்களின் காசியிது; புனிதத் தனிக்கோடி'' என்று பேராசிரியர் டாக்டர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் இதனைப் பாடியுள்ளார்கள்.

நினைவும் செயலும்

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்ற பாரதியின் வரியைச் செயல் வடிவில் கண்டிட அப்போதைய மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை வித்துவான் வகுப்பு மாணவர்களான திரு. மா. முத்துராமனும் (புலவர் மாமணி) திரு சித. சுப்பிரமணியனும் நினைத்தார்கள். அதன்படி நினைத்ததைச் செயல் படுத்தினார்கள். ஆமாம் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியின் அப்போதைய பேராசிரியர் புலவர் நாகசண்முகம் அவர்களைத் தலைவராகக் கொண்டு 2-11-1956 அன்று வள்ளுவர் மன்றத்தைத் தொடங்கினார்கள். பேராசிரியர் திரு. இரா. சோமசுந்தரனார் அதனைத் திறந்து வைத்தார். மன்றம் வளர திரு. ஆ. முத்துராமன் பெருந் துணையாக இருந்தார்.

மக்கள் படித்திட 30 பத்திரிகைகளுக்கு மேலாக வரவழைக்கப் பெற்று ஒரு பெரிய நூலகமாகவே அது இயங்கியது. கரும் பலகையில் நாளும் ஒரு குறள் எழுதப் பெற்று மக்கள் பார்வைக்கு வைக்கப் பெற்றது. 'வள்ளுவம் வாழ்க' என்று தொடங்கும் முத்தமிழ்க் குறியுள்ள சின்னம், மன்றத்தின் சின்னமானது துவக்க நாட்களில் திருவாளர்கள் அ. தியாகராஜன் (ராஜா), வி. முருகப்பன், சோமசுந்தரம் ஆகி



மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்றத்தின் அழகிய தோற்றம்

யோர் சிறந்த தொண்டாற்றினர் கள்.

இலக்கிய விழா

ஆண்டுதோறும் மாட்டுப் பொங்கலன்று இம்மன்றத்தின் சார்பாக இலக்கிய விழாக்கள் நடைபெற்று வருகின்றன இது வரை 32 ஆண்டுகள் இலக்கிய விழாக்கள் கொண்டாடப் பெற்றுள்ளன. பேச்சுத் தமிழோடு 'புலவர் மாமணி' திரு. மா. முத்துராமன் எழுதிய பல நாடகங்களும் அவ்விழாவில் நடத்தப் பெற்றுள்ளன. சன்மார்க்க சபைப் பொன் விழாவிலும் அருள்மிகு சுப்பையா கோயில் பூஜை விழாக்களிலும் இம்மன்றம் சிறந்த சேவைகளைச் செய்துள்ளது. பாராட்ட வேண்டிய நேரத்தில் பெரியவர்களையும் மன்ற உறுப்பினர்களையும் பாராட்டியுள்ளது.

12 ஆம் ஆண்டு விழா

இம்மன்றத்தின் 12 ஆம் ஆண்டு விழாவை புலவர் மாமணி திரு. மா. முத்துராமனும், திரு. ஆ. முத்துராமனும் பெரிய மாநாடாகவே நடத்தினர்கள்.

கால் கோள்விழா

மன்றத்திற்கென ஒரு தனிக் கட்டிடம் வேண்டுமென உறுப்பினர்கள் பெரு விருப்பம் கொண்டார்கள். அதன்படி 18-3-1973ல் சன்மார்க்க சபைத் தலைவர் பழ. சா. பழநியப்ப செட்டியார் அவர்களால் மன்றக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. அதன்பின்பு கட்டிடத்தை எழுப்பிட பெருமுயற்சி நடந்தது. பொருளாளர் அமரர் சி. ஆ வி. தேனப்பன் அவர்களின் தொண்டு மறக்க முடியாததாகும். நிதி திரட்டுதலில் திருவாளர்கள் ஆ. முத்துராமன், புலவர் ஆறு. சுப. ஆறுமுகம், ஆ. ஏகப்பன். பொருளாளர் சு. நா. நாகப்பன், ஆ. மு. ராம. முத்தப்பன், செ. சண்முகம் ஆகியோர் பெருந் துணை புரிந்தார்கள். சுங்கைப் பட்டாணி திரு. இராம. முத்தப்பன் அவர்கள் கட்டிடத்திற்கு முதல் நன்கொடையாக ரூபாய் 1000/- தந்தார்கள். ஆ. பழ. ஆண்டியப்ப செட்டியார் அவர்கள் கட்டிடம் சிறப்பாய் அமைய. மேற்பார்வை பார்த்து மேலான தொண்டாற்றினர்.

சரஸ்வதி எங்கே?

மேலச்சிவபுரி வள்ளுவர் மன்ற விழா ஒனறிற்கு 'தமிழ்க் கடல்' இராய. சொக்கலிங்கம் அவர்கள் வந்தார்கள் அருகில் இருந்த வி என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் இராய. சொ. வைப் பார்த்து ''சரஸ்வதி வரவில்லையா?'' எனக் கேட்க ''என்னுடன் வந்திருக்கிருள்.'' என அவர் சொல்ல, '' எங்கே? காணவில்லையே!'' என வி என். சிடி. அவர்கள் மீண்டும் கேட்க, ''என் நாவிலேதான் சரஸ்வதி இருக்கிருளே! அவளுடன்தானே வந்திருக்கிறேன்'' என்ருர்கள் 'தமிழ்க் கடல்' அவர்கள்.

பையை விடாத பெரியவர்

வள்ளுவர் மன்ற விழாவிற்கு ஒருமுறை வருகை தந்த 'முத்தமிழ்க் காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், தான் கொண்டு வந்திருந்த ஒரு பையை கீழே வைக்காமல் தன்னுடனே எடுத்துச் சென்ருர். மேடை ஏறியபோது ''அய்யா அந்தப் பையை இப்படித் தாருங்கள். நான் வைத்திருக்கிறேன்'' என்று புலவர்மாமணி கேட்டபோது. ''நான் இன்னும் இளமையாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? நான் எங்கு போனாலும் என் பையை நானேதான் வைத்திருப்பேன். பிறருக்குத் தொல்லை தரவே மாட்டேன்.'' என்று கூறி அந்தப் பையை, பிடிவாதமாக தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

கட்டிடத் திறப்பு விழா

தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வள்ளுவர் மன்றத்தின் புதிய கட்டிடத்தை 10-3-1974ல் திறந்து வைத்தார்கள்.

கட்டிடத் திறப்புவிழா மலரை வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் வெளியிட்டார்கள். ''என்னை முதன் முதலில் பேச வைத்த மேடை வள்ளுவர் மன்ற மேடைதான்'' என்று வி. என். சிதம்பரம் அவர்கள் பெருமையோடு சொல்லி வருவதைப் பலரும் அறிவார்கள்.

''சிற்றணில் கூடி ஸ்ரீ ராமர்க்குப் பாலம் அமைத்த கதையாய் சிறுவரெலாம் கூடி வள்ளுவர்க்குச் சீரான மன்றம் அமைத்தார்'' என்று கவியரசு கண்ணதாசன் அவர்கள் இம்மலரில் பாராட்டியுள்ளார். இதுவரை இம்மன்றத்தில் நடைபெற்ற கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சந்திப்பு அரங்கங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பேறிஞர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

''கம்பன் புகழ் வாழ்க -கன்னித் தமிழ் வாழ்க'' என்பது காரைக்குடியின் தாரக மந்திரம்


''வள்ளுவன் புகழ் வாழ்க - வண்டமிழ் வாழ்க'' என்பது மேலைச்சிவபுரியின் தமிழ் மந்திரம்.

வெள்ளி விழா

இம்மன்றம் தனது 25-ஆம் ஆண்டு வெள்ளிவிழாவை 23-5-81 & 24-5-81 ஆகிய இரு தினங்கள் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவில் தமிழகத்தின் முன்னணிப் பேச்சாளர்கள் பலர் பங்கேற்றுர்கள். மன்ற நிறுவனர்கள் புலவர்மாமணி திரு மா. முத்துராமன, புலவர் திரு சித. சுப்பிரமணியன் இருவருக்கும் ''முத்தமிழக் காவலர்'' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். வெள்ளிவிழா சிறப்புற அமைய திருவாளர்கள் அ. சுப. அண்ணாமலை, திரு. சுப்பையா சா. சிங்காரம், சி. நாகப்பன். கரு. இராமநாதன், கரு. வெற்றிச்செல்வன் ஆகியோர் சிறந்த தொண்டாற்றினர்கள்.

பண்டிதமணியின் நூற்றுண்டு விழா

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களது நூற்றுண்டு விழாவையும் இம்மன்றம் சிறப்புடன் கொண்டாடியுள்ளது பண்டிதமணி விழாக் குழு சார்பாக நீதி நெறிகள் ஒப்புவித்தல் போட்டியை கடந்த 7 ஆண்டுகளாக இம்மன்றம் நடத்திப் பரிசுகளை வழங்கி வருகிறது.



புலவர் மாமணி மா. முத்துராமன்

முன்னுள் தலைவர்கள்

இம்மன்றத்தில் திருவாளர்கள் புலவர் நாகசண்முகம், சித. இராமலிங்கம், சா. அண்ணாமலை சுப மு இராம. முத்தப்பன், சு. நா. நாகப்பன், ஆறு. சுப. ஆறுமுகம், ஆ. மு. ராம. முத்தப்பன் சி. ஆ. சி. தேனப்பன், அ. சுப. அண்ணாமலை ஆகியோர் தலைவர்களாகத் தொண்டாற்றியிருக்கிருர்கள்.

செயற்குழு


இப்போது திரு. சா. சிங்காரம் தலைவராகவும் திரு. ந. சுவாமிநாதன் துணைத் தலைவராகவும் திரு. கரு. இராமநாதன், திரு. கா. சுவாமிநாதன் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் திரு. சு. நா. நாகப்பன் திரு. ஆ. ஏகப்பன் இருவரும் பொருளாளர்களாகவும் புலவர்மாமணி மா. முத்துராமன் விழாக் குழுத் தலைவராகவும் இருந்து வள்ளுவர் மன்றத்தை சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இம்மன்றத்தில் மொத்தம் 100 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

திட்டங்கள்

வள்ளுவர் மன்றத்தில் திருக்குறள் வகுப்புகளை நடத்தவும் கட்டிடத்திற்கு முன்னால் மண்டபம் அமைத்து அதில் வள்ளுவர் சிலை ஒன்றை நிறுவவும் வள்ளுவர் இசைப் பள்ளியை ஏற்படுத்தவும் திட்டங்கள் உள்ளது என நிறுவனர் புலவர்மாமணி தெரிவித்தார்.

நகரத்தார் கோயில்களில் வழிபாடு

காரைக்குடி முத்துப்பட்டணம் நகரத்தார்கள் 150பேர் திரு. மெ. இராமநாதன் ஏற்பாட்டில் பேருந்துகள் மூலம் 11-12-88 அன்று ஒன்பது நகரக் கோயில்களுக்கும் சென்று ஆராதனைகள் செய்து வழிபட்டு வந்தனர். துலாவூர், பாதரக்குடி, கோயிலூர் ஆதீன கர்த்தர்களும் இந்த வழிபாட்டில் கலந்து கொண்டு, நகரத்தார்களுக்கு ஆசி கூறினர்கள். எல்லாக் கோயில்களிலும் அதன் நிர்வாகத்தினர் சிறப்பாக வரவேற்று வழிபாடு செய்து வைத்து உபசரித்தனர்.



கீழச்சிவல்பட்டி ஏ எம். பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் (பொது மேலாளர், சகாய் ரப்பர் புராடக்ட்ஸ், மதுரை) புதல்வன் செல்வன் சிதம்பரம் B Com. (L. I. C. காரைக்குடி)க்கும் பள்ளத்தூர் ராம. நா. நா. ரெ. ரெ. அழகப்ப செட்டியார் அவர்கள் (B. O. M. கொள்ளிடம்) புதல்வி செல்வி சீதாலெட்சுமிக்கும் பள்ளத்தூரில் 15-9-88 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



கண்ணே கண்ணுறங்கு

கவிதை ஆக்கம் : KP. அழகம்மை
M. A., M. phil., B. Ed
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை, அலமேலு அங்கப்பன் கல்லூரி, பி. குமாரபாளையம், சேலம் மாவட்டம்.

கண்ணே கண்ணுறங்கு
கற்கண்டே நீயுறங்கு
சாண்பிள்ளை யானாலும்
ஆண்பிள்ளை வேணுமின்னு
அல்லும் பகலுமே
ஆண்டவனை வேண்டிவேண்டி
விரும்பித் தவமிருந்து
வேண்டிவரும் சாதியிலே
பொண்ணுபல இருந்தாலும்
அரசொண்ணு இல்லையின்னா
அடுத்தவுக பிள்ளெயை
தத்தெடுத்துக் கூட்டிவந்து
பரம்பரை வளர்த்துவரும்
பாங்கான குலத்திலே
வந்துதித்த ரத்தினமே
வாகான செல்வமேநீ
எங்குறையைத் தீர்க்கவந்த
என்னரசுச் செல்வமே
முன்னவுக போலநீ
பலநாடு செல்லோணும்
பக்குவமாப் பேசோணும்
பாங்காக நடக்கோணும்
பூங்குன்றன் சொல்லைநீ
வேதமாக் கொள்ளோணும்
யாதும் ஊருன்னும்
தம்பிநீ நெனக்கோணும்

யாவரும் சொந்தமின்னு
எவரிடமும் பழகோணும்
பண்பா நடந்துநீ
பலசெல்வஞ் சேக்கோணும்
சொந்தஞ் சுறுத்துகளைச்
சுகமாக வாழவைக்க
நிழல்தரும் மரமா
நிண்ணுநீ உதவோணும்
தனக்கின்னு பாராமெ
தன்கிளையெ வளக்கோணும்
பொண்ணுக்குப் பெரும்பணம்
சிந்திச்சும் பாக்காது
நல்லொழுக்கப் பொண்ணை நீ
பாத்து முடிக்கோணும்
கழுத்துரு கண்டசரம்
கருத்தாக எண்ணாது
கழுத்துக்குத் திருப்பூட்ட
கருத்தாக எண்ணிவிடு
பொண்ணுவந்து கூடிவிட்டா
பொங்கும்மனம் கொண்டுவிட்டா
பொன்னும் பொருளும்
போர்போரா வந்துசேரும்
மண்ணும் வளமும்
மாருது வந்துசேரும் (கண்ணே)

இராயவரத்தில் பட்டிமன்றம்

இராயவரம் செங்கிடாய்க் கருப்பர் ஆலயத்தில், மேல வட்டை ஒன்பது ஊர் இரணிக் கோயில் நகரத்தார்கள் சார்பில் 2-12-88 அன்று 'கவிஞர் கண்ண தாசன் கவிதைகளில் மேலோங்கி நிற்பது கம்பனின் கைவண்ணமா? வள்ளுவனின் வழித்தடமா?'' எனும் தலைப்பில் பேராசிரியர் திரு பா. நமசிவாயம் தலைமை யில் பட்டிமன்றம் நடைபெற்றது. கவிஞர் திரு சிவ. நாகராஜன் வ ர வேற்றுர் கொப்பனுபட்டி 'முத்துமாரி முத்துச் செல்வன்' திரு. மு. ப. மு. ராம. சேது ராமன் செட்டியார் முன்னிலை வகித்து விழாவைத் தொடங்கி வைத்தார். ''கம்பனின் கைவண் ணமே'' எனும் அணியில் புலவர் மாமணி மா. முத்துராமன் டாக் டர் கரு. முத்தையா ஆகியோ ரும், ''வள்ளுவனின் வழித்தட மே'' எனும் அணியில் பேராசிரி யர் சுப. கதிரேசன், கவிஞர் சோம சிவப்பிரகாசம், பேராசிரியர் சபா அருணுசலம் ஆகியோரும் வாதிட் டார்கள். ''கம்பனின் கைவண் ணமே'' என்று நடுவர் பா. நமசிவாயம் தீர்ப்பு வழங்கினர்.

திருமணம்

தாட்டரசன்கோட்டை சேவு. ராம. ராம. சேதுராமன் செட்டி யார் அவர்கள் புதல்வி செல்வி கண்ணுத்தாள் என்கிற வள்ளிக் கண்ணுவுக்கும் கல்லல் லெ. நா. கரு. கருப்பையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சுப்பிரமணியனுக்கும் 23-10-88 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற் றது

1989 டைரி

பெரியவர்களும் மற்றவர்களும் விரும்பிப் பயன்படுத்தும் வகையில் 'நாநயா' அமைப்பு மிக அழகான டைரியைத் தயாரித்துள்ளது. புத்தாண்டுப் பரிசாக வழங்கத்தக்க இது விஜயா பிரிண்டர்ஸ் 28, டவுன்ஹால் ரோடு, மதுரை-625 001 என்ற முகவரியில் ரூ. 5/ விலையில் கிடைக்கும்.

இராமேஸ்வரத்திற்கு முதல் காவடி - பாதயாத்திரை

தேவகோட்டையிலிருந்து திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையில் 55 பேர் 7-12-88 அன்று காலையில் பாத யாத்திரை புறப்பட்டனர். உப்பூர் வெயிலுகந்த விநாயகரை வழிபட்டு, தேவிபட்டினத்தில் நவ பாஷாணம் வணங்கி, பிரப்பன் வலசையில் பாம்பன் சுவாமிகள் கோயிலில் வழிபாடு செய்து, 12-12-88 அன்று இராமேஸ்வரத்திற்கு இனிதே சென்று 13-12-88 அன்று தீர்த்தமாடி, இராமநாதர் கோயிலில் உள்ள அருணகிரிநாதரால் பாடப்பெற்ற முருகப் பெருமானுக்கு முதல் காவடி செலுத்தி வழிபட்டனர். பாம்பன் பாலத்தைப் பாதயாத்திரையாக முதன் முதலில் கடந்து வந்த இவர்களைப் பாராட்டி காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் காவடி தாங்கிய திருத்தொண்டர் திரு.. வயிரவனுக்குப் பொன்னுடை போர்த்தினார்.

மணிவிழா

நாட்டரசன்கோட்டை கண. மெ. சொ. கண. மெய்யப்பச் செட்டியார் அவர்களுக்கும் திருமதி மீனாட்சி என்கிற தில்லை ஆச்சி அவர்களுக்கும் நாட்டரசன் கோட்டையில் 25-8-88 அன்று 60-ஆம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

படிப்பின் பயன்

ஒவ்வொருவரும், தத்தம் தொழிலைச் செம்மையாகச் செய்ய வைக்கும் நூல்களைப் படிக்க வேண்டும். மனத்தை உறுதிப் படுத்தும், உவகைப்படுத்தும் நூல்களைப் படிக்க வேண்டும். நல்ல நூல்களைப் படித்தவர்களால் தான், எதையும் சிக்கல் இல்லாமல் விவாதிக்கவும், பிறருக்கு எடுத்துச் சொல்லவும் முடியும். இவர்களது பேச்சில் விஷயம் இருக்கும்; விவேகம் இருக்கும்; விந்தை இருக்கும்.

—மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

பாராட்டுகிறோம்

மதுரை பாத்திமாக் கல்லூரி மாணவியான செல்வி எஸ். வள்ளிக்கண்ணு 1987 ஏப்ரலில் நடைபெற்ற பி எஸ்ஸி., இறுதி ஆண்டுத் தேர்வில் - பகுதி ஒன்று தமிழில் 400க்கு 307 மதிப்பெண்



கள் பெற்று மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் முதலிடம் பெற்றார். இதனைப் பாராட்டி 4-5-88 அன்று மேற்படி பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் மேதகு முனைவர் பி சி. அலெக்ஸாண்டர் அவர்கள் நற்சான்றிதழ் வழங்கினார்கள். மதுரை நகரத்தார் இளைஞர் சங்கமும் இவரது கல்வித் திறமையைப் பாராட்டிப் பரிசு வழங்கியுள்ளது.

இப்போது மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரியில் M, Sc. (physics) பயின்று வரும் செல்வி வள்ளிக்கண்ணு சண்முகநாதபுரம் சுப. நா. ராம. சண்முகம் செட்டியார் அவர்களது புதல்வி யாவார். அவர் மேலும் சிறப்புப் பெற வாழ்த்துகிறோம்.

திருமணம்

பாகனேரி பெரி. அழ. மு நாராயணன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முத்துக் கருப்பன் என்னும் சம்பத்துக்கும் ஒக்கூர் செ. கண. சோம. கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் ஒக்கூரில் 20-11-88 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ

பூலாங்குறிச்சி லெ. சிங்காரம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சிகப்பி என்ற மலர்விழிக்கும் வலையபட்டி பெரி. சிவலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் லெட்சுமணனுக்கும் 6-11-88 அன்று பூலாங்குறிச்சியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை எய்தினர்

ஆ. முத்துப்பட்டணத்தைச் சேர்ந்த சித. நாரா. நாராயணன் செட்டியார் அவர்கள் பர்மா தட்டோனில் 21-11-88 அன்று தமது 86ஆவது வயதில் இயற்கை எய்தினர்கள். 22-11-88 அன்று பர்மாவில் அன்னரது இறுதிச் சடங்குகள் நம் குல வழக்கப்படி நடைபெற்றன. தட்டோனில் உள்ள வேகுப்பட்டி அண்ணுமலை செட்டியார் அவர்கள் நாராயணன் செட்டியார் அவர்களின் பூத உடலுக்குக் கொள்ளி வைத்தார்கள்

நாராயணன் செட்டியார் அவர்கள் தடடோனில் 18ஆண்டுகள் நகராட்சித் தலைவராகவும் அகில பர்மா-இந்தியக் காங்கிரசில் பல்லாண்டுக் காலம் தலைவராகவும் சேவை செய்தார்கள். ஐ. என். ஏ விடுதலைப் போரில் பெரிதும் பங்கு பெற்றவர்கள் இரங்கூன் நாட்டுக் கோட்டைச் செட்டியார் சங்கத்திலும் தெண்டாயுதபாணி கோயில் குழுவிலும் முக்கிய பங்கு வகித்தவர்கள்.

இந்திய விடுதலை நாளையும் குடியரசுத் திருநாளையும் காந்தி அடிகளின் பிறந்த பெரு நாளையும் தொடர்ந்து நடத்தி பாரதப் பிரதி நிதியாகவும் பழுத்த தேசியத் தொண்டராகவும் விளங்கினர்கள்.

முருகப் பெருமானின் சித்திரைத் திருவிழாவை அரை நூற்றுண்டுக் காலமாக விமரிசையுடன் நடத்தி தட்டோன் வாழ் அனைத்து இன மக்களின் பேரன்பையும் பேராதரவையும் பெற்றவர்கள்.

இவர்களுக்கு கவிஞர் திரு. நாரா. நாச்சியப்பன், திரு சிதம்பரம், திரு. தண்ணீர்மலை, திரு. பழநியப்பன் ஆகிய நான்கு புதல்வாகள் உள்ளனர். திரு. அரசு நாச்சியப்பன், நாராயணன் செட்டியாரின் மகள் வீட்டுப் பேரனுவார்.

M. கண்ணன் பி. காம்.,

தோற்றம் : 13-10-1964
மறைவு : 20- 1-1984



காலமவன் வெள்ளமாக
வடிவெடுத்து
கண்ணுஉனை வருகவென
அழைத்து(ச்)சென்ருன்
அன்புருவே எங்களைநீ
பிரிந்து சென்று
இன்ருேடு ஐந்தாண்டு
நினைவு நாளாம்
ஆக்கமுடன் தம்பியரும்
அப்பா அம்மா
ஆச்சியவர் தம்மக்கள்
உயர்ந்துவாழ
அருள்புரிவாய் மறுபடியும்
எம்மகத்தில்
உருவெடுத்து மனமகிழ
வாழ்விப்பா(யே)!

KR, மெய்யப்பன்
கமலா மெய்யப்பன்
விரையாச்சிலை

சித்ரா குமரப்பன் (ஆச்சி)
M, சிதம்பரம் M, முத்து
(தம்பிகள்)

பிள்ளை வரம் வேண்டுவோர் கவனத்திற்கு

(பிள்ளைவரம் வேண்டுவோர் தெய்வங்களைத் துதித்து தினந்தோறும் பாராயணம் செய்ய எழுதப் பெற்ற பாடல்கள் இவை:)

கற்பக விநாயகர்

திருவளர, அருள்வளர, நெறிவளர, பண்புநிறை
செழுங்கருணை யோங்கி வளர,
தினம்பணியும் அன்பரது மனம்வளர, இனம்வளர
தேசம் செழித்து வளர,
உருவளர, மெய்வளர, பயிர்வளர. வறிஞருக்(கு)
உணவுதரு சீலம் வளர,
ஒளிவளரும் படிவளரும், உயிர்வரை நின்னருள்
உதவிடும் ஞான வடிவே!
மருவளரும் வாடாம லர்மங்கை மருதீசர்
மடிவளரும் மாணிக் கமே!
மாதங்கமே! பொங்கு கீதங்கொள் கருணையால்
வையகம் காக்கும் அரசே!
கருவளர, அருள்புரிந்(து) எளிய சீர்பெறவென்
கையில்வளர சேய்தரு குவாய்!
கற்பகத் தெய்வமே! அற்புதம் காட்டியெமைக்
காக்கின்ற மூல முதலே!

அம்பிகை

காழியிலோர் சிறுபிள்ளை கூவியழப் பாலமுது
கனிந்துநீ ஊட்ட லிலையோ?
கயிலைவளர் நாதனொடு மயிலையில் வரம்தரும்
கற்பகம் நீயும் அலையோ?
சூழுமிருள் மாயவடல் சூரறை குமரன்கைச்
சுடர்வேல்நீ தந்த திலையோ?
சொல்லரிய நின்கருணை வெள்ளமதில் மூழ்கிநிதம்
சுகிப்பவர்கள் கோடி யிலையோ?
நாழியிரு நெல்கொண்டு வாழுமுயிர் கட்கெலாம்
நல்லறம் செய்த திலையோ?
நம்பனிட பாகத்தில் வம்புமலர்த் தார்கொண்ட
நாயகீ! மனது வைத்தால்
ஏழையேற் கருள்செய்வ தரியசெயலோ? வெனக்
கினியசேய் தந்தருளு வாய்!
ஏதிலா மதுரைவளர் கோதிலா அன்னையென
இலங்குமீ னாட்சி யுமையே!

சிவபெருமான்

வானவரும், மானிடரும், தானவரும் வந்துநிதம்
வணங்கிடும் மா தேவனே!
வையைக்கும், கருணைபொழி ஐயைக்கும் இறைவனே!
வடிவுடைய கணநா தனே!

ஊனமற, ஈனமற, ஞானமுற, கல்லால
உயர்மரத் தடியி ருந்து
உபதேசம் செய்தருள்செய் தெட்சணு மூர்த்தியே!
ஒளிர்கின்ற முக்கண் ணனே!
வாணர்க்குச் செம்பொனருள் மாணிக்க வண்ணனே!
மன்றில்நின் ருடும் அரசே!
மங்கையைப் பாகத்தில், கங்கையைச் செஞ்சடையில்
மான்கரத் தேந்தும் இறையே!
நான்நிற்க, யெந்தனது நலம்நிற்க வெள்மனையில்
நற்சேய்தந் தருள்க வையா!
நல்லறிவும் அன்புமே வல்லசிவம் என்னுரைசெய்
நாத!கயி லாய பதியே!

திருமால்

நீலமுகில் நின்றுலவு கோலமலை யேழின்மேல்
நின்றருளும் வெங்க டேசா!
நினைவிலும் கனவிலுமுன் இணையடிகள் போற்றுமென்
நிலையும்நீ யறியா ததோ?
ஓலமிடும் யானைக்குக் காலெனவி ரைந்தோடி
உயர்பதம் தந்த மாலே!
உற்றகுரு வாயூவில் பற்றுவிழ நின்றவர்க்(கு)
உதவிடும் நாரா யணு!
காலிலையென் ருலும்இரு கையிலையென் ருலும்
கண்ணில்லை யென்ற போதும்,
கலங்கிலேன்! மயங்கிலேன்! நலங்கினரும் வாழ்வில்நான்
கடைத்தேறப் பிள்ளை யிலையே!
ஆலிலையில் துஞ்சுசிறு பாலக!நீ யென்மனையில்
ஆட்சிசெயப் பிள்ளை தருவாய்!
ஆகாய வண்ணனே! பாகான கண்ணனே!
அணிபெரு பரந் தாமனே!

சுப்பிரமணியர்

சரவணு! திருமகள் மருகனே! சண்முகா!
சல்லாப வள்ளி கணவா!
சத்ருசங் காரனே! உக்ரதண் டாயுதா!
சச்சிதா னந்த குருவே!
குறைவிலா தொளிகுமதி யொருகோடி யொன்ருகிக்
குவிந்ததென வந்த எழிலே!
கொண்டல்தவழ் தென்பொதிகை தண்டமிழ் வழங்கவரு
கும்பமுனி கண்ட இறைவா!
திருவெலாம் தந்துநற் றெளிவெலாம் தந்துநற்
நிலமெலாம் தந்த போதும்
செல்வங்கள் துய்க்கவோர் சிறுபிள்ளை இல்லையே!
சிறியனேன் என்செய் குவேன்!
கரவிலா உணர்வொடுன் திருவடிகள் போற்றுமென்
கையிலொரு மகவு தருவாய்!
கங்கைக்கும் மலைமன்னன் மங்கைக்கும் ஒருசேயாய்
கனிவுதரும் கந்த வேளே!

மு. நா. நாராயணன் காரைக்குடி

இயற்கை எய்தினர்

கண்டரமாணிக்கம் செ. சி. நா. க. நா. நாராயணன் செட்டியார் அவர்கள் தமது 73 ஆவது வயதில் 10-12-88 அன்று கண்டரமாணிக்கத்தில் இயற்கை எய்தினர்கள் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த இவர்கள் பல ஆண்டுகள் இலங்கையில் தொழில் செய்தவர்கள். பக்திமான். எளிமையானவர்கள். பிறருக்கு உதவி செய்து இன்பம் கண்டவர்கள்.

இவருக்கு தில்லை ஆச்சி என்கிற மனைவியும் திரு. கந்தசாமி என்கிற புதல்வரும் திருமதி அழகு ஆச்சி என்கிற புதல்வியும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

ஃ ஃ

பள்ளத்தூரைச் சேர்ந்த சிவ. கா. இராமன் செட்டியார் அவர்கள். 25-12-88 இரவு மதுரை திருநகரில் இயற்கை எய்தினர்கள் இவர்கள் திருநகர் பேரூராட்சியின் தலைவராகவும் திருநகர் வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் சிறந்த சேவை செய்தவர்கள் மதுரை விஜயா பிரிண்டர்ஸ் நிறுவனர்.

ஃ ஃ

கிருஷ்ணன் செட்டியார் இயற்கை எய்தினர்

பாகனேரி அரு. கி கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் (வயிரவன் கோயில் - பெரிய வகுப்பு) தமது 89 ஆவது வயதில் 23-12-88 அன்று மாலை 4-15 மணி அளவில் பாகனேரியில் இயற்கை எய்தினர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்கள் தர்மசிந்தனையுள்ளவர்கள், பக்திமான், வயிரவன் கோயில் தர்ம பரிபாலன சபைத் தலைவராகவும் செயற்குழு உறுப்பினராகவும் இருந்து சேவை செய்தவர்கள்.

பாகனேரியில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு ஸ்ரீ புல்வாய் நாயகி அம்மன் ஆலயத்திற்குப் புதிதாகத் தேர் செய்து கொடுத்த பெருமை இவர்களுடையது. தள்ளாத வயதிலும் பல ஊர்களுக்கும் சென்று வந்து தேர் செய்ய முழு முயற்சி எடுத்துக் கொண்டார்கள், தேர் செய்யும் திருப்பணிக் குழுவின் செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து நெல்லும் பணமுமாக நன்கொடை பெற்று சுமார் ரூ 2,30,000/- செலவில் இரண்டு ஆண்டுக் காலத்தில் தேர்த் திருப்பணியை நிறைவேற்றினர்கள்

இவர்களுக்கு இராமநாதன் என்கிற புதல்வரும் இராமநாதன் என்ற மாதவன் என்கிற பேரனும் உள்ளனர்.

கற்கோயில் பற்றி.....

நான் பணக்காரனாக வருவேனானால் கவியரசர் கண்ணதாசனுக்குக் கற்கோயில் எழுப்புவேன்.

—பேராசிரியர் சுப. கதிரேசன்

(திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தில் 18-12-88 அன்று நடைபெற்ற பட்டிமன்றத்தில்)

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.